# தினபூமி

thinaboomi.com






**மே 8 முதல் 10-ம் தேதி வரை 3 நாட்கள் உக்ரைன் போர் தற்காலிக நிறுத்தம்: ரஷ்ய அதிபர் புதின் திடீர் அறிவிப்பு**


...2-ம் பக்கம்


**ஓ.டி.டி.யில் ஆபாச படங்கள்: மத்திய அரசு பதிலளிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவு**


...3-ம் பக்கம்


**லக்னோ மெதுவான பந்துவீச்சு: கேப்டன் ரிஷப் பந்துக்கு ரூ.24 லட்சம் அபராதம்**


...6-ம் பக்கம்




## கலைஞர் பல்கலைக்கழகம்: சட்ட முன்வடிவு தாக்கல்

சென்னை, ஏப். 29-



**கும்பகோணத்தில் கலைஞர் பல்கலைக்கழகத்திற்கான சட்ட முன்வடிவை சட்டசபையில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தாக்கல் செய்தார்.**

சட்டசபை உறுப்பினர்களின் கோரிக்கையை அடுத்து கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் புதிய பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருந்தார்.

இந்த நிலையில் கலைஞர் பல்கலைக்கழகம் சட்ட முன்வடிவை சட்டசபையில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தாக்கல் செய்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வேந்தராக கொண்டு கும்பகோணத்தில் கலைஞர் பல்கலைக் கழகம் அமைகிறது.

கலைஞர் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக உயர் கல்வித்துறை அமைச்சர் இருப்பார். 17 கல்லூரிகள் கலைஞர் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் எனவும் சட்டமுன்வடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




● தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று கவர்னர் மாளிகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் மனோ தங்கராஜுக்கு பால்வளத்துறை அமைச்சராக பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சபாஷ்.. சரியான போட்டி...

## அமைச்சர் துரைமுருகன் பேச்சால் சிரிப்பலை

சென்னை, ஏப்.29-

**தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு குறித்து வானதி மற்றும் அமைச்சர் கீதா ஜீவன் இடையே விவாதம் நடந்தது.**

தமிழக சட்டசபையில் நேற்று காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று பா.ஜ.க. உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசும்போது, "தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை" என்று குற்றம்சாட்டினார்.

அப்போது பேசிய அமைச்சர் துரைமுருகன், "ராமாயணத்திலேயே பெண்ணை தூக்கிச் சென்றுவிட்டனர், எல்லா இடத்திலும் நல்லவர்கள் இருக்க முடியாது" என்று பதில் அளித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் கீதாஜீவன், "பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது" என்று தெரிவித்தார்.

பா.ஜ.க. உறுப்பினர் வானதி சீனிவாசனுக்கு அமைச்சர் கீதா ஜீவன் பதில் அளித்ததை பார்த்து அமைச்சர் துரைமுருகன், "சபாஷ்.. சரியான போட்டி.." என்றார். இதனால், அவையில் சிரிப்பலை எழுந்தது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

## அமைச்சராக மனோ தங்கராஜ் பதவியேற்பு

சென்னை, ஏப். 29-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தமிழக பால்வளத்துறை அமைச்சராக மனோ தங்கராஜ் பதவியேற்றார். அவருக்கு கவர்னர் ஆர்.என்.ரவி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.**

தமிழக அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜி, பொன்முடி ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். தி.மு.க. அரசு 2021-ம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகு இவர்கள் 2 பேரும் 2-வது முறையாக அமைச்சர் பதவியை இழந்துள்ளனர். செந்தில் பாலாஜி, பொன்முடி ஆகியோரிடம் இருந்த துறைகள் 3 அமைச்சர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கருக்கு கூடுதலாக மின் துறை வழங்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி துறை அமைச்சர் எஸ். முத்துசாமிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், காதி மற்றும் பால்வளத்துறை அமைச்சரான ராஜ கண்ணப்பனிடம் இருந்து பால்வளத்துறை எடுக்கப்பட்டு, அதற்கு பதில் வனத்துறை வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல், ஏற்கனவே பால் வளத்துறை அமைச்சராக இருந்து விடுவிக்கப்பட்ட பத்மநாதபுரம் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. மனோ தங்கராஜுக்கு மீண்டும் அந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, அமைச்சர் பொறுப்பில் இருக்கும் எஸ்.எஸ்.சிவசங்கர், எஸ்.முத்துசாமி, ராஜ கண்ணப்பன் ஆகியோருக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டாலும் அவர்கள் மீண்டும் பதவி ஏற்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால், பால் வளத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மனோ தங்கராஜ், அமைச்சர் பதவியை ஏற்க வேண்டும். இதற்கான பதவி ஏற்பு விழா இன்று மாலை சென்னை கிண்டியில் உள்ள ராஜ் பவனில் நடைபெற்றது. அவருக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் கவர்னர் ஆர்.என்.ரவி செய்து வைத்தார். இந்த நிகழ்வில், முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## தி.மு.க. ஆட்சியில் எந்த வழக்காக இருந்தாலும் விரைந்து நடவடிக்கை

### இ.பி.எஸ்.க்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்

சென்னை, ஏப். 29-

**தி.மு.க. ஆட்சியில் எந்த வழக்காக இருந்தாலும் விரைந்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டம்-ஒழுங்கை பற்றி பேச அ.தி.மு.க.விற்கு எந்த தகுதியும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.**

தமிழக சட்டசபையில் நேற்றைய கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:- அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகம் அமைதியாக இருந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் பெண்கள் வாழும் மாநிலமாக தமிழகம் இருந்தது. தமிழ்நாடு காவல்துறையில் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை. போதைப்பொருள் நடமாட்டம், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், கொலை, கொள்ளை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே இருக்கிறது என்று கூறினார்.

இதற்கு பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- தி.மு.க. ஆட்சியில் எந்த வழக்காக இருந்தாலும் விரைந்து வழக்குப்பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிறப்பான ஆட்சியை எதிர்க்கட்சி தலைவர் குறை சொல்வது இந்த ஆண்டின் சிறந்த நகைச்சுவை. கடந்த 4 ஆண்டுகளில் குற்றங்கள் குறைந்துள்ளன. காவல்நிலைய மரணங்கள் இல்லை. அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களை மக்கள் கண்ணீருடன் புலம்புகிறார்கள். திமுக ஆட்சியில் 3,640 ரவுடிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் என்பது சூழ்நிலைக்கு தகுந்தது போல தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

சென்னையில் குறுகிய காலத்தில் 2.5 லட்சம் சி.சி. டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சியில் கண்காணிப்பு கேமராக்கள் மட்டுமே வைத்தார்கள். தி.மு.க. ஆட்சியில் கண்காணிப்பு கேமராக்களை பராமரித்து சரியாக செயல்பாட்டில் வைத்து உள்ளோம். கொலை வழக்கில் 95.2 சதவிகிதம், கொள்ளை வழக்கில் 98.4 சதவிகிதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 15,899 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி; அவமான ஆட்சிக்கு அ.தி.மு.க. ஆட்சியே சாட்சி. சாமானிய மக்களுக்கு எதிரான நடவடிக்கைக்கு சாத்தான்குளமே சாட்சி; துயரமான ஆட்சிக்கு தூத்துக்குடியே சாட்சி; ஊழல் வழக்குகளில் இருந்து தப்பித்துக் கொள்ள தமிழகத்தின் உரிமைகளை அடகுவைத்த ஆட்சி அ.தி.மு.க.. சட்டம்-ஒழுங்கை பற்றி பேச அ.தி.மு.க.விற்கு எந்த தகுதியும் கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

### மத்திய அரசு உத்தரவை அடுத்து தமிழ்நாட்டில் இருந்து

## 200 பாகிஸ்தானியர்கள் வெளியேற்றம்

சென்னை, ஏப்.29-

**மத்திய அரசு உத்தரவைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருந்து 200 பாகிஸ்தானியர்கள் வெளியேற்றபட்டுள்ளனர்.**

காஷ்மீரில் பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து, பாகிஸ்தானுடனான அனைத்து உறவையும் இந்தியா துண்டித்துள்ளது. இதையடுத்து இந்தியாவில் தங்கி உள்ள பாகிஸ்தானியர்கள் கடந்த 27-ந்தேதிக்குள் வெளியேற வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டது.

இந்த கால அவகாசத்துக்குள் பாகிஸ்தானியர்கள் வெளியேற்றப்படுகிறார்களா? என்பதை அந்தந்த மாநில அரசுகள் உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்று மாநில முதல்-மந்திரிகளுக்கு மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா அறிவுறுத்தல்களை வழங்கினார். இதைத்தொடர்ந்து இந்தியாவில் தங்கி இருக்கும் பாகிஸ்தானியர்கள் பெயர், விவரங்களை குடியுரிமை அதிகாரிகள் கணக்கெடுத்து வெளியேற்றும் பணியை தொடங்கினார்கள்.

அந்த வகையில், தமிழ்நாட்டில் இருந்து 200-க்கும் மேற்பட்ட பாகிஸ்தானியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். சென்னையில் 20 பாகிஸ்தானியர்கள் தங்கி இருந்தனர். இதில் மருத்துவ சிகிச்சைக்காக வந்திருந்த 2 பாகிஸ்தானியர்கள் தவிர்த்து மீதமுள்ளவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அதே போன்று வேலூரில் உள்ள பிரபல ஆஸ்பத்திரி உள்பட தமிழ்நாட்டில் உள்ள சில ஆஸ்பத்திரிகளில் பாகிஸ்தானியர்கள் சிகிச்சை பெற்று வருவதாக தெரிகிறது. அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு இன்று வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானியர்களை வெளியேற்றும் பணியை குடியுரிமை அதிகாரிகள் உளவுப்பிரிவு போலீசார் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றனர். எத்தனை பாகிஸ்தானியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்ற உறுதியான தகவல்கள் கசிய விடக்கூடாது என்று உளவுப்பிரிவு போலீசாருக்கு மத்திய அரசு தரப்பில் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. எனவேதான் பாகிஸ்தானியர்களை வெளியேற்றும் நடவடிக்கை ரகசியமாக மேற்கொண்டு வருகின்றனர்.

### ஈட்டிய விடுப்பு சரண் வரும் அக்டோபர் மாதம் முதல் அமல்:

### பண்டிகை கால முன்பணம் 20 ஆயிம் ரூபாயாக உயர்வு:

# அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 2 சதவீதம் உயர்வு

## சட்டப்பேரவையில் 9 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஏப். 29-

**தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு, ஈட்டிய விடுப்பு, மகப்பேறு விடுப்பு காலமும் பதவி உயர்வுக்கான தகுதிகாண் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**



**முன்னோடி மாநிலம்....**

தமிழக சட்டபேரவை நேற்று (ஏப்.28) காலை கூடியதும் முதல்வர் ஸ்டாலின் விதி எண் 110-ன் கீழ் அரசு ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்தார். மேலும், பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக அமைக்கப்பட்ட குழு வரும் செப்டம்பருக்குள் அறிக்கையை சமர்ப்பிக்கும் என்றும் அவர் கூறினார். தமிழக சட்டப்பேரவையில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை விதி 110-ன்கீழ் வெளியிட்டு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- நிர்வாகத்தினுடைய தூண்களாவும், அரசின் கரங்களாவும் விளங்குபவர்கள் நம் அரசு ஊழியர்கள். இந்த திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களும், பல்வேறு துறைகளில் திட்டப் பணிகளும் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அகில இந்திய அளவில் நம்முடைய தமிழ்நாடு பலவகையில் முதலிடத்திலேயும் முன்னோடி மாநிலமாகவும் திகழ்கிறது.

அரசு ஊழியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் அனைவரின் உழைப்பும், சீரிய பங்களிப்பும் இதற்கு ஒரு மிக முக்கியமான காரணம். அரசு நடைமுறைப்படுத்தி வருகிற நலத் திட்டங்கள், யாருக்கும் விட்டுப் போகாமல், அனைத்து மக்களையும் சென்றடைய பணியாற்றும் அரசு ஊழியர் ஒவ்வொருவரையும் இந்த தருணத்தில் தமிழக அரசின் சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் பாராட்டி, வாழ்த்தி மகிழ்கிறேன். தற்போது, அரசு ஊழியர் நலன் கருதி, அவர்களுக்காக ஒன்பது அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

**முதல் அறிவிப்பு:**

கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்திலே, அரசின் நிதி நிலையின் மீது ஏற்பட்ட பெரும் சுமையின்


(கடைசி பக்கம் பார்க்க)


### சட்டசபை கூட்டம் இன்றுடன் முடிகிறது:

## மானியக்கோரிக்கைகளுக்கு விரிவான பதில் அளிக்கிறார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, ஏப்.29-

**சட்டசபை கூட்டம் இன்றுடன் முடிகிறது. மானியக் கோரிக்கைகளுக்கான விரிவான பதிலுரையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தெரிவிக்கிறார்**

தமிழக சட்டசபைக் கூட்டத் தொடர் கடந்த மாதம் (மார்ச்) 14-ந்தேதி தொடங்கியது. அன்றைய தினம் பட்ஜெட்டும், அதற்கு மறுநாள் (15-ந்தேதி) வேளாண் பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டது. அதன் பிறகு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறை மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப் பட்டு அதன் மீது விவாதமும் அமைச்சர்களின் பதிலுரையும் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் நேற்று காவல் துறை, தீயணைப்பு மீட்பு பணிகள் துறைக்கான மானியக் கோரிக்கைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்திருந்தார். இதன் மீது சட்டசபையில் ஒவ்வொரு கட்சி எம்.எல்.ஏ.க்களும் பேசினார்கள். அவ்வப்போது குறுக்கிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்தார்.

இந்த மானியக் கோரிக்கைகளுக்கான விரிவான பதிலுரையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தெரிவிக்கிறார். அப்போது காவல் துறை தீயணைப்பு துறைக்கான புதிய அறிவிப்புகளையும் வெளியிடுகிறார்.


சட்டசபைக் கூட்டத் தொடரில் வங்கிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் கட்டாய கடன் வசூலில் ஈடுபட்டால் 5 ஆண்டு சிறை தண்டனை அல்லது ரூ.5 லட்சம் அபராதம் விதிக்க வழிவகை செய்யும் சட்ட மசோதாவை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்திருந்தார். அதே போல் மருத்துவ கழிவுகளை கொட்டினால் விசாரணையின்றி சிறையில் அடைக்கும் புதிய மசோதாவை அமைச்சர் ரகுபதி தாக்கல் செய்திருந்தார்.

இதே போல் அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, முத்துசாமி, மூர்த்தி கோவி. செழியன் ஆகியோரும் சட்ட மசோதாக்களை தாக்கல் செய்துள்ளனர். கருணாநிதி பெயரில் பல்கலைக் கழகம் கொண்டு வருவதற்கான மசோதாவும் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது. இந்த மசோதாக்கள் அனைத்தும் இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. அத்துடன் சட்டசபைக் கூட்டம் இன்று முடிவடைகிறது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| ↑ 1,005.84 | ↑ 289.15 |
| பாயிண்ட் 80,218.37 | பாயிண்ட் 24,328.50 |



**தங்கம்**
1 சவரன் ₹71,520
1 கிராம் ₹8,940



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.23

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### மே 8 முதல் 10-ம் தேதி வரை 3 நாட்கள்

# உக்ரைன் போர் தற்காலிக நிறுத்தம்: ரஷ்ய அதிபர் புதின் திடீர் அறிவிப்பு

**மாஸ்கோ, ஏப்.29-**

அடுத்த மாதம் 8ம் தேதி முதல் 10ம் தேதி வரை 3 நாட்களுக்கு போரை தற்காலிகமாக நிறுத்துவதாக ரஷ்ய அதிபர் புதின் அறிவித்துள்ளார்.

உக்ரைன், ரஷ்யா இடையேயான போர் ஆயிரத்து 159வது நாளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

கிறிஸ்தவ மதத்தினரின் முக்கிய நிகழ்வான ஈஸ்டர் பண்டிகை கடந்த 20ம் தேதி கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மட்டும் தற்காலிக போர் நிறுத்தத்தை ரஷ்யா அமல்படுத்தியது.



அதன்பின்னர், மீண்டும் போர் தொடங்கி நடைபெற்று வருகிறது. அதேவேளை, போர் நிறுத்தம் தொடர்பான அமைதி பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகவும் ரஷ்ய அதிபர் புதின் அறிவித்தார்.

இந்நிலையில், உக்ரைன் போரை 3 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்துவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. அதன்படி, அடுத்த மாதம் 8ம் தேதி முதல் 10ம் தேதி வரை 3 நாட்களுக்கு போரை தற்காலிமகாக நிறுத்துவதாக ரஷ்ய அதிபர் புதின் அறிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்ததன் 80ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி உக்ரைன் போர் 3 நாட்கள் நிறுத்தப்படுகிறது. இரண்டாம் உலகப்போரின் முக்கிய போராக 'பெரும் தேசபக்தி போர்' பார்க்கப்படுகிறது. ஜெர்மனியை எதிர்த்து சோவியத் யூனியன் (ரஷ்யா) போரிட்டதே 'பெரும் தேசபக்தி போர்' என அழைக்கப்படுகிறது. அந்த போர் நிறைவடைந்த 80ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி உக்ரைன் போரை 3 நாட்கள் நிறுத்த புதின் ஒப்புதல் அளித்துள்ளார்.

3 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம் தொடர்பான ரஷ்யாவின் அறிவிப்பிற்கு உக்ரைன் தரப்பில் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கப்படவில்லை

### பஹல்காம் தீவிரவாத தாக்குதல்:

# இந்தியா, பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வலியுறுத்தல்

**வாஷிங்டன், ஏப். 29-**

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை அடுத்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் உரிய தீர்வு காண வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது.

கடந்த 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து தீவிரவாதத்துக்கு புகலிடம் அளிக்கும் பாகிஸ்தானை வழிக்கு கொண்டுவர, சிந்து நதிநீர்ப் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்துவது உள்ளிட்ட 5 முக்கிய முடிவுகளை இந்திய அரசு எடுத்தது. இதற்கு பதில் நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசும் மேற்கொண்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான சூழலை அமெரிக்கா உன்னிப்பாக கவனித்து வருகிறது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டு அரசுடன் நாங்கள் தொடர்பில் இருக்கிறோம். இந்தியா - பாகிஸ்தான் இடையே உரிய தீர்வு காண அமெரிக்கா ஊக்குவிக்கிறது. அதே நேரத்தில் பஹல்காமில் நடந்த தீவிரவாத தாக்குதலை அமெரிக்கா வன்மையாக கண்டிக்கிறது. இந்த விஷயத்தில் நாங்கள் இந்தியாவின் பக்கம் நிற்கிறோம் என அமெரிக்க அரசு துறையின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் ஆகியோரும் பஹல்காம் தாக்குதலை கண்டித்திருந்தனர். மேலும், இந்தியாவுக்கு தங்களது ஆதரவை வழங்கி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், தீவிரவாதத்தை அழிக்க இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா எந்த வகையிலும் தடையாக இருக்காது என வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

### அமைச்சரவையில் மீண்டும் இடம்:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அமைச்சர் மனோ தங்கராஜ் நன்றி




**சென்னை, ஏப். 29-**

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மீண்டும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் செந்தில் பாலாஜி மற்றும் பொன்முடி ஆகியோர் அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளனர். ராஜினாமா செய்த பொன்முடி மற்றும் செந்தில்பாலாஜி ஆகியோர் வசம் இருந்த இலாகாக்கள் 3 அமைச்சர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு உள்ளது. மேலும் ஏற்கனவே பால்வளத்துறை அமைச்சராக இருந்து அந்த பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட மனோ தங்கராஜுக்கு மீண்டும் அமைச்சரவையில் இடம் வழங்கப்பட்டு இருக்கிறது. போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கருக்கு, மின்சாரத்துறை கூடுதலாக ஒதுக்கப்பட்டு உள்ளது. வீட்டுவசதித் துறை அமைச்சர் எஸ்.முத்துசாமிக்கு, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை கூடுதலாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

இதேபோல், காதி மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பனிடம் இருந்த பால்வளத்துறை எடுக்கப்பட்டு, அவருக்கு வனம் மற்றும் காதித்துறை ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பால்வளத்துறை மனோ தங்கராஜ் வசம் ஒப்படைக்கப்படும் என தெரிகிறது/ இந்த நிலையில் மீண்டும் அமைச்சராக பதவி ஏற்க உள்ள நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து மனோ தங்கராஜ் வாழ்த்து பெற்றார். மேலும் அமைச்சரவையில் மீண்டும் வாய்ப்பளித்த முதல்-அமைச்சருக்கு நன்றி என்று அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

மக்கள் சேவையாற்ற தமிழக அமைச்சரவையில் மீண்டும் வாய்ப்பளித்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றேன். இதற்கு உறுதுணையாக இருந்த கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கும், எனது மனப்பூர்வமான நன்றிகள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

### பஹல்காம் தாக்குதல் சம்பவம்:

# ரஷ்யா, சீனா தலையிட பாகிஸ்தான் வலியுறுத்தல்

**மாஸ்கோ, ஏப்.29-**

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பாக ரஷ்யா மற்றும் சீனா தலையிட வேண்டும் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்., 22ம் தேதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில், பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த சம்பவத்தை தொடர்ந்து, பாகிஸ்தானுடனான அனைத்து தொடர்புகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசு தீவிர ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பஹல்காம் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையில் ரஷ்யா மற்றும் சீனா தலையிட வேண்டும் என்று பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் தெரிவித்துள்ளார். அவர் பேசியதாவது; பஹல்காம் தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று பிரதமர் ஷெபாஷ் ஷெரீப் முன்மொழிந்துள்ளார். இந்தியா சொல்வது குறித்து அறிய ரஷ்யா மற்றும் சீனா அல்லது வேறு ஏதேனும் மேற்கத்திய நாடுகள் ஒரு குழுவை அமைத்து விசாரிக்க வேண்டும்.

பஹல்காம் சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் யார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும். இந்த தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பிருப்பதற்கான ஆதாரங்களை காட்ட வேண்டும், இவ்வாறு அவர் கூறியுள்ளார்.இந்த விவகாரத்தில் இருந்து தப்பிக்க, பல்வேறு நாடகங்களை பாகிஸ்தான் அரசு அரங்கேற்றி வருகிறது. அதில் ஒன்றாக, சர்வதேச விசாரணை வேண்டும் என்று இப்போது கூறத் தொடங்கியுள்ளது.

### திருப்பதி அருகே விபத்து:

# தமிழகத்தை சேர்ந்த 5 பேர் பலி

**அமராவதி, ஏப். 29-**

கண்டெய்னர் லாரி மீது கார் மோதி விபத்துக்குள்ளானது இதில் தமிழகத்தை சேர்ந்த 5 பேர் பலியானார்கள்.

தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரை சேர்ந்த 7 பேர் காரில் ஆந்திராவுக்கு சென்றுகொண்டிருந்தனர். ஆந்திராவின் திருப்பதி அருகே தொட்டப்பள்ளியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த போது முன்னே சென்ற கண்டெய்னர் லாரி மீது கார் மோதியது.

இந்த கோர விபத்தில் காரில் பயணித்த 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்தவர்களின் பெயர் உள்ளிட்ட விவரம் இதுவரை வெளியாகவில்லை.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**29-04-2025**




**மேஷம்:-** உடல் சோர்வால் உள்ளமும் சோர்வடையும். எடுத்த காரியங்களில் தன்னம்பிக்கையுடன் ஈடுபடுங்கள். குடும்பத்தினரிடையே வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**ரிஷபம்:-** தங்கள் தனிப்பட்ட திறமை காரணமாக காரிய வெற்றி ஏற்படும். பாராட்டு பெறுவீர்கள். பலவழிகளிலும் பணவரவு உண்டு. வியாபாரிகளுக்கு, இன்று சிறந்த பேச்சு மூலதனமாகும்.

**மிதுனம்:-** வியாபாரிகளுக்கு இலாபங்கள் ஓரளவு குறையும். பெண்களால் பெரிய தொகை விரயமாகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் தீரும். உங்கள் திறமைக்கு மதிப்பு இருக்காது.

**கடகம்:-** எதிர்பார்ப்புக்கு மேல் இலாபங்கள் அதிகரிக்கும். திருமணம் போன்ற சுப காரியங்களுக்கு சென்று மன மகிழ்ச்சி அடைவீர்கள். எல்லா வகையிலும் ஏற்றம் வரும். பெண்களால் லாபம் ஏற்படும்.

**சிம்மம்:-** தனவரவுகள் தாராளமாக இருக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் உற்சாகம் மிகும். வங்கி அதிகாரிகள் தொழில் விரிவாக்கத்துக்கு கடன் தந்து உதவுவர்.

**கன்னி:-** முயற்சி திருவினையாக்கும் எளிதில் வெற்றி கிடைக்கும். தீர்த்த யாத்திரைகள் தெய்வ நம்பிக்கை கூடும். மன அமைதி கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் இருக்கும்.

**துலாம்:-** அரசு உதவிகள் தாமதப்படும். ஆரோக்கியக் குறைவினால் வேண்டாத மனக்கவலை ஏற்படலாம். மனைவியின் கலகத்தால் குடும்பத்தினரிடையே ஒற்றுமை குறையலாம்.

**விருச்சிகம்:-** பலவழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். வாகன சுகமும், மதிப்பும் மரியாதையும் கூடும். காதல் வலையில் விழ நேரலாம். சிலருக்கு மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**தனுசு:-** புதுப் பெண்கள் சிநேகத்தால் மகிழ்ச்சி உண்டாகும். சொந்த வீடு வாங்க முயல்வீர்கள். இதுவரை இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து தனவரவு உண்டாகும்.

**மகரம்:-** கடினமாக உழைத்தால் கட்டாயம் வெற்றி கிட்டும். வாழ்க்கையில் முன்னேற்றம் காண தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கதவைத் தட்டும்.

**கும்பம்:-** பழகிய தோழர்களே பணமோசம் செய்வர் எனவே, ஏமாறாமல், எதிலும் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். மற்றவர் வேலையில் மூக்கை நுழைத்தாள் உங்கள் காரியங்கள் தடைப்படும்.

**மீனம்:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, சுகம் ஆகியவை அதிகரிக்கும். மனத்தெம்பும், மன மகிழ்ச்சியும் ஏற்படும். மனைவியின் ஒத்துழைப்பால் பணவரவு அதிகரிக்கும்.

# என்.சி.இ.ஆர்.டி. பாடநூலில் கும்பமேளா அத்தியாயங்கள் சேர்ப்பு

### முகலாய வரலாறு நீக்கம்

**புதுடெல்லி, ஏப். 29-**

என்.சி.இ.ஆர்.டி. பாடநூலில் மகாகும்பமேளா உள்ளிட்ட பல புதிய அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பல வருடங்களாக பாடநூலில் இடம்பெற்ற முகலாயர்கள் மற்றும் டெல்லி சுல்தான்கள் வரலாறு நீக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் கீழான என்.சி.இ.ஆர்.டி.யில் நடப்பு கல்வி ஆண்டுக்கான 7-ம் வகுப்பு பாடநூலில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இது, பெரிய அளவிலான மறுசீரமைப்புகளை உள்ளடக்கிய புதிய பாடநூலாகக் கருதப்படுகிறது. இதில், பல புதிய அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டு ஏற்கெனவே இருந்தவை நீக்கப்பட்டுள்ளன. சமூக-பொருளாதாரப் பகுதியில் 'மேக் இன் இந்தியா', பேட்டி பச்சாவ் பேட்டி படாவ் (பெண் குழந்தையை காத்து வளர்ப்பது) அட்டல் டனல் போன்ற அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. வரலாற்று பாடங்களில் இந்திய வம்சங்கள், புவியியல் அம்சங்கள் மற்றும் மகாகும்பமேளா பற்றிய புதிய அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பமேளாவில், சுமார் 65 கோடி மக்கள் வந்து புனித நீராடினர் என்ற குறிப்பு உள்ளது. இப்பாடப்பகுதியில் முன்பிருந்த முகலாயர்கள் மற்றும் டெல்லி சுல்தானியர்கள் பற்றியப் பாடங்கள் நீக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றம், மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை 2020 மற்றும் பள்ளிக் கல்விக்கான தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளன.

சமூக அறிவியல் பாடநூலில் "சமூக ஆய்வு: இந்தியா மற்றும் அதற்கு அப்பால் என்ற தலைப்பிலும் புதிய அத்தியாயங்கள் இணைக்கப்பட்டுள்ளன. சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் பண்டைய இந்தியாவின் சில வம்சங்கள் உள்ளன. இந்தியாவை ஆண்ட மகதம், மவுரியர்கள், ஷுங்காக்கள் மற்றும் சாதவாகனர்கள் உள்ளிட்டவை அதில் இடம் பெற்றுள்ளன. இப்பாடநூலின் மற்றொரு புதிய பதிப்பில், 'பூமி எவ்வாறு புனிதமாகிறது' என்ற அத்தியாயம் உள்ளது. இஸ்லாம், கிறிஸ்தவம், யூத மதம், ஜோராஸ்ட்ரிய மதம், இந்து மதம், பௌத்தம் மற்றும் சீக்கியம் போன்றவை பற்றி இதில் உள்ளன. இந்தியா மற்றும் அதன் வெளியே உள்ள நாடுகளிலும் புனிதத்தலங்கள் மற்றும் புனித யாத்திரைகள் பற்றியும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த அத்தியாயத்தில் 12 ஜோதிர்லிங்கங்கள், சார்தாம் யாத்திரை மற்றும் சக்தி பீடங்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன. 'புனித புவியியல்' என்ற அத்தியாயத்தில் இந்திய நதிகளின் சங்கமங்கள், மலைகள் மற்றும் காடுகள் போன்ற இடங்களின் விவரங்கள் உள்ளன.

பத்ரிநாத் மற்றும் அமர்நாத்தின் பனிக்கட்டி சிகரங்கள் முதல் கன்னியாகுமரியின் தெற்கு முனை வரையிலானப் புனித யாத்திரைகளும் உள்ளன. இந்த பாடநூலில், உள்ளது. என்சிஇஆர்டியின் 7-ம் வகுப்பு பாடநூலின் இரண்டாம் பகுதி அடுத்த சில மாதங்களில் வெளியிடப்பட உள்ளது. வெளியாக உள்ள இந்த நூலில் முதல் நூலில் நீக்கப்பட்ட இடைக்கால இந்தியா மீண்டும் இடம்பெறுமா எனத் தெரியவில்லை. இதுபோல், இடைக்கால இந்தியாவின் ஆட்சியாளர்களான முகலாயர்கள் பாடங்கள் குறைப்பதும் நீக்குவதும் முதன்முறையல்ல. மேலும், தனிநபர்கள் தங்கள் வீடுகளில் தேசியக் கொடியை பறக்க அனுமதிக்கும் இயக்கம் குறித்த ஓர் அத்தியாயமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் வெயில் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும்: வானிலை ஆய்வு மையம்

**சென்னை, ஏப்.29-**

தமிழகத்தில் கோடைகாலம் தொடங்கியுள்ளதால் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இந்த நிலையில் கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் வருகிற 4-ந்தேதி தொடங்குகிறது. மே 28-ந்தேதி வரை அக்னி நட்சத்திரம் நீடிக்கும். ஆனால் தற்போது அக்னி நட்சத்திரம் தொடங்கும் முன்பே வெப்பத்தின் தாக்கம் அதிகமாக உள்ளது. இந்த நிலையில் தமிழகத்தில் வருகிற 1-ந்தேதி வரை வெயில் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் கூறி இருப்பதாவது:- தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் வருகிற 3-ந்தேதி வரை மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. தமிழகத்தில் ஒருசில இடங்களில் வருகிற 1-ந்தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக உயரும். 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரிக்கக்கூடும். இவ்வாறு கூறப்பட்டு உள்ளது.

### போர் பதற்றத்தால் காஷ்மீரில்

# எல்லையோர கிராமத்தில் பதுங்கு குழிகளை தயார் செய்யும் மக்கள்

**புதுடெல்லி, ஏப். 29-**

பாகிஸ்தானுடன் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளதால் காஷ்மீர் எல்லையோர கிராமங்களில் உள்ள பதுங்கு குழிகளை அப்பகுதி மக்கள் தயார் செய்து வருகின்றனர்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். இதையடுத்து, காஷ்மீர் எல்லையில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் காஷ்மீர் எல்லையோர கிராமங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் நிலத்தடி பதுங்கு குழிகளை தயார் செய்து வருகின்றனர்.

இது ஏற்கெனவே இப்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற தன்மையை நினைவூட்டுவதாக உள்ளது. 'மோடி பதுங்கு குழிகள்' என பிரபலமாக அறியப்படும் இவற்றில் போர்வைகள் மற்றும் படுக்கைகள் போன்ற அத்தியாவசிய பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

எல்லைக்கு அப்பால் இருந்து (பாகிஸ்தான்) நடத்தப்படும் தாக்குதலில் இருந்து பொதுமக்களை பாதுகாக்க, எல்லை கட்டுப்பாட்டுக் கோடு அருகே நிலத்தடியில் பதுங்கு குழிகள் கட்டப்பட்டுள்ளன. இவை மோடி பதுங்கு குழிகள் என அழைக்கப்படுகின்றன.

பூஞ்ச் மற்றும் ரஜவுரி உள்ளிட்ட அதிக ஆபத்துள்ள பகுதிகளில் தனிநபர் மற்றும் சமூக பதுங்கு குழிகளை கட்ட நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை மத்திய அரசு வழங்கியது. பிரதமர் நரேந்திர மோடியின் 2-வது ஆட்சியின்போது இத்தகைய பதுங்கு குழிகள் அதிக அளவில் கட்டப்பட்டன.

ஜம்மு பிராந்தியத்தில் கடந்த 2021-ம் ஆண்டு சுமார் 8 ஆயிரம் பதுங்கு குழிகள் கட்டப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முதல் கட்டமாக ஜம்மு, கதுவா, சம்பா, பூஞ்ச் மற்றும் ரஜவுரி ஆகிய 5 மாவட்டங்களில் 14,460 பதுங்கு குழிகளை கட்ட மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது. பின்னர் ஆபத்து அதிகம் உள்ள அனைத்து பகுதிகளிலும் பதுங்கு குழிகளை கட்ட அனுமதி வழங்கப்பட்டது.

### பஹல்காம் விவகாரத்தில் இந்தியா நடவடிக்கை:

# பாக்., ராணுவத்தில் இருந்து 1,200 வீரர்கள் வெளியேறினர்

**இஸ்லாமாபாத், ஏப். 29-**

பஹல்காம் விவகாரத்தில் இந்தியா நடவடிக்கை காரணமாக ராணுவத்தில் இருந்து பாகிஸ்தான் வீரர்கள் அடுத்தடுத்து வெளியேறி வருகின்றனர். 4 நாட்களில் 1,200 பாகிஸ்தான் வீரர்கள் வெளியேறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலாப்பயணிகள் மீது கடந்த 22-ந் தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

உலகையே உலுக்கிய இந்த சம்பவத்தில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதாக மத்திய அரசு குற்றம் சாட்டியது. மேலும் பாகிஸ்தானுக்கு எதிராக பல அதிரடி நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

குறிப்பாக பாகிஸ்தான் உடனான சிந்துநதி நீர் ஒப்பந்தம் ரத்து, நாட்டில் வசிக்கும் பாகிஸ்தானியர்கள் வெளியேற உத்தரவு, அட்டாரி-வாகா எல்லை மூடல் உள்ளிட்ட பல அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதேபோல நாட்டின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக நாட்டின் எல்லை பகுதியில் ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் எல்லைப்பகுதியில் போர் பதற்றம் உருவாகியுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவின் பதிலடிக்கு பயந்து ராணுவத்தில் இருந்து பாகிஸ்தான் வீரர்கள் அடுத்தடுத்து வெளியேறி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த 4 நாட்களில் 1,200 பாகிஸ்தான் வீரர்கள் அதிரடியாக ராணுவத்தை விட்டு வெளியேறியுள்ளனர். ராஜினாமா செய்தவர்கள் வீரர்கள் மட்டுமின்றி அதிகாரிகளும் இதில் இடம் பெற்றுள்ளதாக முக்கிய தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை பாகிஸ்தான் அரசு அதிகாரப்பூர்வமாக ஒப்புக் கொள்ளவில்லை.

இருப்பினும் ராஜினாமா தொடர்பாக உள்துறைக்கு எழுதிய கடிதங்கள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. பாகிஸ்தான் ராணுவத்தின் உட்பூசல், நிதி தட்டுப்பாடு மற்றும் இதர பிரச்சினைகள் காரணமாக வீரர்கள் ராஜினாமா செய்துள்ளதாக மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது.

**மரம் மனிதனின் உரம்**

## நாங்குநேரி விபத்தில் உயிரிழந்த
# 7 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணம்
## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப்.29-

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி அருகே கார்கள் மோதிக் கொண்ட விபத்தில் பலியான 7 பேரின் குடும்பத்துக்கும் தலா ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி, அருகில் திருநெல்வேலி – நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் ஏப்.27 மாலை சுமார் 5 மணியளவில் நாகர்கோவிலிருந்து திருநெல்வேலிக்கு சென்றுகொண்டிருந்த கார் ஒன்றின் மீது, திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்கு வந்துகொண்டிருந்த கார் ஒன்று தடம் மாறி எதிர்பாரா தவிதமாக நேருக்கு நேர் மோதிய விபத்தில் மேற்படி வாகனங்களில் பயணம் செய்த 16 நபர்களில் திருநெல்வேலி மாவட்டம், பாளைங்கோட்டை வட்டம், டக்கரம்மாள்புரம், விவேகானந்தர் காலனியைச் சேர்ந்த தனிஸ்லாஸ் (68), மார்க்ரெட் மேரி (60), ஜோபர்ட் (40), அமுதா (35), குழந்தைகள் ஜோபினா (8), ஜோகன் (2) மற்றும் ராதாபுரம் வட்டம், கன்னங்குளத்தைச் சேர்ந்த மேல்கேஸ் (60) ஆகிய 7 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வரும் பாலகிருஷ்ணவேணி (36), அன்பரசி (32), பிரியதர்ஷினி (23), சுபி.சந்தோஷ் (21), அட்சயாதேவி (19), பிரவின் (10) மற்றும் அஸ்வின் (8) ஆகிய 7 நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

## பிரதமர் மோடியுடன் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் சந்திப்பு

புதுடெல்லி, ஏப்.29-

பிரதமர் நரேந்திர மோடியை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று (திங்கட்கிழமை) சந்தித்தார். இந்த சந்திப்பு பிரதமரின் இல்லத்தில் நடந்தது.

முன்னதாக, பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் பற்றி பாதுகாப்பு படைகளின் தலைவர் அனில் சவுகான் ராஜ்நாத் சிங்கிடம் நேற்று முன்தினம் விளக்கியிருந்தார். இந்நிலையில், அதற்கு அடுத்தநாளில் பிரதமருடனான இச்சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

அதேபோல், பஹல்காம் தாக்குதல் பற்றி விவாதிக்க நாடாளுமன்ற வளாகத்தில் ராஜ்நாத் சிங் தலைமையில் நடந்த அனைத்து கட்சி கூட்டத்துக்கு மூன்று நாட்களுக்கு பின்பு நேற்றைய சந்திப்பு நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

## ராணுவத்துக்கு நிதி கோரி பரவும் செய்திகள்: மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி, ஏப்.29-

ராணுவத்துக்கு நிதி அளிக்கக்கோரி சமூக வலைதளங்களில் பரவும் செய்திக்கு மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் உள்ள சுற்றுலா தளத்தில் கடந்த 22ம் தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதல் காரணமாக இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இதனிடையே போர் பதற்றம் காரணமாக இந்திய ராணுவத்திற்கு நிதி அளித்து உதவுங்கள் என்று வாட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் செய்திகள் பரவின. இந்நிலையில், இந்திய ராணுவத்திற்கு நிதி அளிக்கக் கோரி வாட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பரப்பப்படும் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை என மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. இதுபோன்ற போலியான செய்திகளை நம்பி பொதுமக்கள் யாரும் தங்களது பணத்தை அளிக்க வேண்டாம் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

## சட்டசபையில் வானதிக்கு ஆதரவாக அ.தி.மு.க., எம்.எல்.ஏ.க்கள் குரல்

சென்னை, ஏப்.29-

''சட்டசபையில் பா.ஜ., எம்.எல்.ஏ., வானதி சீனிவாசனை பேச அனுமதிக்க வேண்டும்'' என அ.தி.மு.க., வினர் குரல் எழுப்பினர்.

சட்டசபையில் விவாத நேரத்தின் போது, பா.ஜ. எம்.எல்.ஏ., வானதி சீனிவாசன் பேசியதாவது: தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருகிறது. குற்றச்செயல்கள் அதிகரிப்பால் அமைதிப் பூங்காவாக உள்ள தமிழகத்தில் சூழல் மாறிக்கொண்டு இருக்கிறது.

பல வரலாற்று காரணங்களால் வட மாநிலங்கள் வளர்ச்சியில் பின்தங்கி உள்ளன. தமிழகத்தை நான் வளர்ந்த மாநிலத்தோடு ஒப்பிடுகிறேன். நீங்கள் ஏன் வட மாநிலத்துடன் ஒப்பிடுகிறீர்கள்? கோவை, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் வங்கதேசத்தை சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். தேச விரோத செயல்கள் நடைபெறாமல் இருக்க வேண்டும். மதவாத செயல்கள் தமிழகத்தில் நடைபெறுவதை தடுக்க வேண்டும். இவ்வாறு வானதி சீனிவாசன் பேசினார்.

இது குறித்து துரைமுருகன் பேசியதாவது: அனைத்து இடங்களிலும் நல்லவர்களும் இருப்பார்கள், கெட்டவர்களும் இருப்பார்கள். எந்த ஆட்சியாக இருந்தாலும் தவறுகள் இருக்கும். எல்லா இடத்திலும் சட்ட ஒழுங்கு பிரச்னை உள்ளது, என்றார்.

இதற்கு முதல்வர் ஸ்டாலின் பதில் அளித்து பேசியதாவது: கோவையில் குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்றுள்ளது உண்மைதான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மதவாத சக்திகள் எங்கு எப்படி உள்ளன என்பதை தெளிவுபடுத்த வேண்டும். பா.ஜ., ஆட்சியில் பல மாநிலத்தில் என்ன நடக்கிறது? தமிழகத்தில் மதவாத சக்திகள் இருக்கிறது என பொதுவாக கூறக்கூடாது. காஷ்மீரில் நடந்த சம்பவம் தமிழகத்தில் நடைபெறாது. இந்த சம்பவத்தில் மத்திய அரசுக்கு தமிழகம் உறுதுணையாக இருக்கும்.

தமிழகத்தில் மதவாதம் ஒருபோதும் நுழையாது. தமிழகத்திற்கு மத்திய அரசின் நிதி வராமல் இருப்பது உங்களுக்கு தெரியும். வானதி சீனிவாசன் தலைமையிடம் சொல்லி நிதியை பெற்று தர வேண்டும். பள்ளிக் கல்வித் துறைக்கு வர வேண்டிய நிதி வரவில்லை. நிதி வழங்க கோரி போராட்டம் நடத்த உள்ளோம். இவ்வாறு அவர் பேசினார்.

'முன்னதாக, சட்டசபையில் பா.ஜ., எம்.எல்.ஏ., வானதி சீனிவாசனை பேச அனுமதிக்க வேண்டும் என அ.தி.மு.க.,வினர் குரல் எழுப்பினர். 'அ.தி.மு.க., பக்கம் இருந்து சத்தம் வருகிறது' என கேள்வி எழுப்பிய சபாநாயகருக்கு, '' அமைச்சர்களுக்காக சபாநாயகர் பேசும் போது, எனக்காக அ.தி.மு.க., வினர் பேசக்கூடாதா?'' என வானதி கேள்வி எழுப்பினார்.

## புதுச்சேரியில் தங்கியிருந்த
# 2 பாகிஸ்தானியர்கள் வெளியேற உத்தரவு

புதுச்சேரி, ஏப்.29-

விசா காலாவதியானதால் வழக்கு பதிவான நிலையில், புதுச்சேரியில் தங்கியிருந்த பாகிஸ்தானியர்கள் இருவர் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது. பல்வேறு விசாக்களில் வந்த பாகிஸ்தானியர்கள் வெளியேற மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்தது.

இந்நிலையில் புதுச்சேரியில் 2 பாகிஸ்தானியர்கள் தங்கி உள்ளனர். இதில் புதுச்சேரி லாஸ்பேட்டை பகுதியைச் சேர்ந்த ஹனீப்கான்(39) கடந்த 2013-ம் ஆண்டு அவரின் உறவினரான பாகிஸ்தானைச் சேர்ந்த பஷியாபானு (38) என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். திருமணமான பின்னர் பஷியாபானு புதுச்சேரியில் வசித்து வந்தார். இதேபோல் புதுச்சேரி பிராந்தியமான மாஹே பிராந்தியத்தில் பஷீர் (65) என்பவர் 2016-ம் ஆண்டு மருத்துவச் சிகிச்சைக்காகப் பாகிஸ்தானிலிருந்து விசாவில் வந்தார். அதன்பின் அவர் மாஹேவிலேயே தங்கிவிட்டார்.

பஹல்காம் சம்பவத்தின் காரணமாக பஷியா பானு, பஷீர் ஆகியோர் இந்தியாவிலிருந்து வெளியேற வெளிநாட்டினர், பதிவு அலுவலக அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். மேலும் பஷியா பானு, பஷீர் ஆகியோரின் விசா ஏற்கெனவே காலாவதியானதும் தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக லாஸ்பேட்டை மற்றும் மாஹே போலீஸார் தனித்தனியாக வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

## பயங்கரவாதிகளை 'போராளிகள்' என்பதா?
# பி.பி.சி.க்கு மத்திய அரசு எச்சரிக்கை

புதுடெல்லி, ஏப்.29-

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை 'போராளிகள்' என பி.பி.சி. தனது கட்டுரையில் குறிப்பிட்டதற்கு கண்டனம் தெரிவித்து மத்திய அரசு கடிதம் எழுதியுள்ளது.

"காஷ்மீர் மீதான கொடிய தாக்குதலுக்குப் பிறகு இந்தியர்களுக்கான விசாக்களை பாகிஸ்தான் நிறுத்தி வைத்துள்ளது" என்ற தலைப்பிலான கட்டுரையில், பயங்கரவாதத் தாக்குதலை "போராளித் தாக்குதல்" என்று பி.பி.சி. குறிப்பிட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் வெளி விளம்பரம் மற்றும் பொது ராஜதந்திரப் பிரிவு, பி.பி.சி.யின் இந்தியத் தலைவர் ஜாக்கி மார்டினுக்கு கடிதம் எழுதியுள்ளது.

அந்தக் கடிதத்தில், "பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பான பி.பி.சி.யின் கட்டுரையில், "இந்திய நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீரில் 26 சுற்றுலாப் பயணிகளைக் கொன்ற 'போராளி தாக்குதலை' தொடர்ந்து பதற்றம் அதிகரித்ததால், பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராக பதிலடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது." என குறிப்பிட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு கடுமையான எச்சரிக்கையை தெரிவித்துள்ள மத்திய அரசு, பி.பி.சி.யின் செய்தி அறிக்கைகளை வெளியுறவு அமைச்சகம் தொடர்ந்து கண்காணிக்கும் என்று தெரிவித்துள்ளது.

சில நாட்களுக்கு முன்பு, பஹல்காம் பயங்கரவாதிகளை "போராளிகள்" என்று தங்கள் செய்தி அறிக்கையில் 'தி நியூயார்க் டைம்ஸ்' தெரிவித்திருந்தது. இதனை, அமெரிக்க செனட் குழு கடுமையாக விமர்சித்தது. தாக்குதல் நடத்தியவர்களை 'போராளிகள்' மற்றும் 'ஆயுதம் ஏந்திய வர்கள்' என்று அழைப்பதன் மூலம் பயங்கரவாத தாக்குதலின் தீவிரத்தை நீர்த்துப்போகச் செய்ய முயல்வதாக நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையை அமெரிக்க நாடாளுமன்ற வெளியுறவுக் குழு விமர்சித்தது.

முன்னதாக, உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 63 மில்லியன் சந்தாதாரர்களைக் கொண்ட 16 பாகிஸ்தான் யூடியூப் சேனல்களை இந்தியா தடை செய்தது. முன்னாள் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தரின் யூடியூப் சேனல், 3.5 மில்லியன் சந்தாதாரர்களைக் கொண்டது. அதுவும் தடை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓ.டி.டி.யில் ஆபாசப் படங்கள்:
# மத்திய அரசு பதிலளிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடில்லி, ஏப்.29-

ஆபாசப் படங்கள், இணையத் தொடர்களை ஓ.டி.டி.யில் வெளியிடுவதற்கு தடை விதிக்கக் கோரிய வழக்கில் ஓ.டி.டி. நிறுவனங்கள், மத்திய அரசு பதிலளிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

ஓ.டி.டி. மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் ஆபாச திரைப்படங்கள், இணையத் தொடர்கள், விடியோக்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி கவாய் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், சமூக ஊடகங்களில் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் ஆபாச விடியோக்கள் பதிவேற்றம் செய்யப்படுவதாகவும், அது தொடர்பான முழுப் பட்டியலும் இணைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். மத்திய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "இது போன்ற காட்சிகளால் குழந்தைகள் பாதிக்கப்படுவது கவலை அளிக்கிறது. இதனைத் தடுக்க சில விதிமுறைகள் நடைமுறையில் இருக்கின்றது. மேலும் சில பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது" என்றார்.

இதனைத் தொடர்ந்து, அமேசான் ப்ரைம், நெட்பிளிக்ஸ், ஜியோ ஹாட்ஸ்டார் உள்ளிட்ட ஓ.டி.டி. நிறுவனங்களுக்கும்,

இன்ஸ்டாகிராம், எக்ஸ் போன்ற சமூக ஊடக நிறுவனங்களுக்கும் மத்திய அரசுக்கும் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தரவிட்டார்.

## கண்ணகி-முருகேசன் ஆணவக்கொலை வழக்கு:
# குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையை உறுதி செய்து சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, ஏப்.29-

கண்ணகி - முருகேசன் ஆணவக் கொலை வழக்கில் குற்றவாளிகள் தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்துள்ளது.



கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அருகே தலித் சமுதாயத்தைச் சேர்ந்த முருகேசன் என்பவர் மற்றொரு சமுதாயத்தைச் சேர்ந்த கண்ணகி என்பவரை காதலித்து கடந்த 5-5-2003 அன்று கடலூர் சார்-பதிவாளர் அலுவலகத்தில் திருமணம் செய்துகொண்டனர். கண்ணகியின் உறவினர்கள் முருகேசனின் சித்தப்பா அய்யாசாமி மூலமாக ஜூலை 8-ம் தேதி முருகேசனையும், மூங்கில்துறைப் பட்டியிருந்து கண்ணகியையும் அழைத்து வந்தனர். பின்னர் முருகேசன், கண்ணகி ஆகியோரை அருகிலுள்ள மயானத்துக்கு அழைத்துச் சென்று இருவருக்கும் மூக்கு, காது வழியாக விஷத்தை செலுத்தி அவர்களைக் கொலை செய்து, சடலங்களை தனித்தனியாக எரித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஊடகங்களில் வெளியானது. அதன் பின்னர் விருத்தாசலம் போலீசார் இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்தனர். அதில் முருகேசன், கண்ணகி ஆகியோர் சாதி மாறி திருமணம் செய்ததால் அவரவர் தரப்பினர் தங்களது பிள்ளைகளை கொலை செய்ததாக கூறி இரு தரப்பிலிருந்தும் தலா 4 பேரை கைது செய்தனர். பின்னர் இந்த வழக்கு சிபிஐ விசாரணைக்கு 2004-ம் ஆண்டு மாற்றப்பட்டது. அதே ஆண்டில் சி.பி.ஐ. குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. கண்ணகி, முருகேசன் ஆணவக்கொலை வழக்கில் 13 பேர் குற்றவாளிகள் என கடலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. கண்ணகியின் சகோதரர் மருது பாண்டிக்கு தூக்கு தண்டனையும், இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்காத போலீஸ் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் உள்பட 12 பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கி உத்தரவிட்டது. 2 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இந்த தீர்ப்பை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கில் கண்ணகி அண்ணனுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது. அதே சமயம் கண்ணகியின் தந்தை உள்ளிட்ட பத்து பேருக்கான ஆயுள் தண்டனை உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து, இந்த தண்டனையை எதிர்த்து குற்றவாளிகளான கந்தவேல், ஜோதி, மணி ஆகியோர் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட், சென்னை ஐகோர்ட் அளித்த தீர்ப்பை உறுதி செய்து உத்தரவிட்டுள்ளது. மேலும் குற்றவாளிகளான கந்தவேல், ஜோதி, மணி ஆகியோரின் மேல்முறையீட்டு மனுவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது.

# செந்தில் பாலாஜி ஜாமீன் வழக்கை முடித்து வைத்தது சுப்ரீம் கோர்ட்

புதுடெல்லி, ஏப்.29-

செந்தில் பாலாஜி ஜாமீன் வழக்கை முடித்து வைத்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பண பரிமாற்ற வழக்கில் செந்தில்பாலாஜியை அமலாக்கத்துறை கடந்த 2023-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ந் தேதி கைது செய்து புழல் சிறையில் அடைத்தது. இதைத்தொடர்ந்து அவர், அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். 471 நாட்கள் சிறைவாசத்துக்கு பின்பு கடந்த ஆண்டு செப்டம்பர் 26-ந் தேதி அவருக்கு ஜாமீன் கிடைத்தது. செப்டம்பர் 29-ந் தேதி மீண்டும் அமைச்சராக பதவி ஏற்றார்.

இதையே காரணமாக வைத்து அமலாக்கத்துறை அவரது ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டை நாடியது. வழக்கை விசாரணையின் போது சுப்ரீம் கோர்ட், செந்தில்பாலாஜி ஜாமீனில் வெளியே இருக்க விரும்புகிறாரா? அல்லது அமைச்சர் பதவியில் தொடர விரும்புகிறாரா? என்பதை தெரிவிக்க வேண்டும் என செந்தில்பாலாஜி தரப்புக்கு காட்டமாக கேள்வி எழுப்பியது.

இதுதொடர்பாக முடிவெடுக்க நேற்று (திங்கட்கிழமை) வரை சுப்ரீம் கோர்ட் காலஅவகாசம் வழங்கியது. இதைத்தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலினிடம், செந்தில் பாலாஜி ராஜினாமா கடிதத்தை வழங்கினார். அதன்படி. இந்த வழக்கு விசாரணை நேற்று மீண்டும் நீதிபதிகள் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது அமலாக்கத்துறை தரப்பில் ஆஜரான வக்கீல், அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றால் கூட செந்தில்பாலாஜி அமைச்சராகக் கூடாது என்றும் மீண்டும் அமைச்சரானால் ஜாமீனை ரத்து செய்யக்கோரும் மனுக்களை தாக்கல் செய்ய வைக்கக்கூடாது என வாதிட்டார். இதற்கு குறுக்கிட்டு வாதிட்ட செந்தில் பாலாஜி தரப்பு வக்கீல், பதவியா, ஜாமீனா என்ற கேள்விக்கு செந்தில்பாலாஜி பதவி விலகி பதில் அளித்து விட்டார் என்றும் மீண்டும் அமைச்சராக முடியாது என சுப்ரீம் கோர்ட் கூற அதிகாரம் இல்லை என்றும் கூறினார்.

இறுதியில், பதவி விலகல் தொடர்பான கவர்னர் மாளிகையின் செய்திக்குறிப்பை ஏற்று செந்தில் பாலாஜியின் ஜாமீனை ரத்து செய்யக்கோரும் மனுக்களை முடித்து வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் செந்தில் பாலாஜி தற்போது அமைச்சராக இல்லை. அந்த வகையில், புதிய கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கத் தேவையில்லை என்று நீதிபதிகள் கூறினர்.

## பஹல்காம் தாக்குதலை கண்டித்து
# ஜம்மு காஷ்மீர் சட்டசபையில் தீர்மானம்

ஸ்ரீநகர், ஏப்.29-

பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு ஜம்மு காஷ்மீர் சட்ட சபையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ஜம்மு காஷ்மீர் பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து கடந்த 23-ந் தேதி முதல் மந்திரி உமர் அப்துல்லா தலைமையில் மந்திரி சபைக் கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, சிறப்பு சட்டசபையைக் கூட்டுவதற்கு ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச அரசு, துணை நிலை கவர்னர் மனோஜ் சின்ஹாவுக்குப் பரிந்துரைத்தது.

இதன்படி நேற்று சட்டசபை சிறப்புக்கூட்டம் கூடியது. சபை கூடியதும், பஹல்காம் படுகொலைகள் தொடர்பாக கண்டனம் தெரிவித்து தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானம் மீது ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச எம்.எல்.ஏ.க்கள் தங்களது கருத்துக்களை முன்வைத்தனர். இதனைத் தொடர்ந்து பஹல்காம் படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம், ஜம்மு காஷ்மீர் சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தில், அவை உறுப்பினர்கள் ஏப்-22-ம் தேதி பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# மணிப்பூரில் 2 தீவிரவாதிகள் கைது

இம்பால், ஏப். 29-

மணிப்பூரின் இம்பால் கிழக்கு மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட அமைப்பான காங்லீபாக் கம்யூனிஸ்ட் கட்சி (நோயோன்)இன் இரண்டு தீவிர உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஷகோல்ஷெம் லெம்பா மைதேயி மற்றும் ஷாகோல்ஷெம் ரோமன் மைதேயி ஆகியோர் கட்சிக்கு நிதி திரட்டுவதற்காக பணம் வசூலிப்பில் ஈடுபட்டதாக மூத்த அதிகாரி ஒருவர் திங்கள்கிழமை தெரிவித்தார். இருவரும் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

இதனிடையே சனிக்கிழமை தெங்னௌபால் மாவட்டத்தில் உள்ள டி மினோ பகுதியில் இருந்து ஆறு ஐ.இ.டி.களை பாதுகாப்புப் படையினர் மீட்டனர். மேலும் இந்த வெடிபொருட்களை அதே நாளில் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் குழு செயலிழக்கச் செய்தது. மணிப்பூரில் 2023-ம் ஆண்டு இன வன்முறை வெடித்ததில் இருந்து மாநிலம் முழுவதும் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழக சட்டசபையில் வானதி-அமைச்சர் கீதா ஜீவன் இடையே காரசார விவாதம்

சென்னை, ஏப்.29-

தமிழக சட்டசபையில் 'பெண்கள் பாதுகாப்பு' தொடர்பாக பா.ஜ.க. எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன், அமைச்சர் கீதா ஜீவன் இடையே காரசார விவாதம் நடந்தது.

நீண்ட பாரம்பரியம் கொண்ட தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என கோவை தெற்கு தொகுதி எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் குற்றம் சாட்டினார். இதற்கு பதில் அளித்த அவை முன்னவர் துரைமுருகன், வாராணசியில் 23 பேர் சேர்ந்து ஒரு பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். ராமாயணத்திலே பெண்ணை தூக்கிச் சென்றனர். எல்லா இடத்திலும் நல்லவர்களும் இருப்பார்கள் கெட்டவர்களும் இருப்பார்கள் என்று கூறினார்.

எனக்கு அச்சம் உள்ளது என வானதி கூறியவுடன் உங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது அரசின் கடமை என சபாநாயகர் அப்பாவு பதில் அளித்தார். இதைத்தொடர்ந்து பேசிய அமைச்சர் கீதா ஜீவன், தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு சிறப்பாக இருக்கிறது. காவல் துறை உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கூறினார்.

# கேரள முதல்வர் பினராயி விஜயன் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்

திருவனந்தபுரம், ஏப். 29-

கேரள முதல் மந்திரி பினராயி விஜயன் வீட்டுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் போலீசார் சோதனையில் ஈடுபட்டனர்.

கேரள மாநில முதல் மந்திரி பினராயி விஜயன் அலுவலகம் மற்றும் அவரது வீட்டுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து.

அனைத்து வளாகங்களிலும் சோதனை நடத்த அதிகாரிகள் வெடிகுண்டு சோதனை பிரிவினரை அனுப்பினர்.


மோப்ப நாய்கள் மற்றும் சிறப்புக் குழுக்கள் மூலம் முழுமையான ஆய்வு நடந்து வருகிறது. இருப்பினும், இது வரை இரு இடங்களிலும் வெடிபொருட்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. பிரதமர் மோடி மே 2ம் தேதி கேரளாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள நிலையில், தற்போது விடுக்கப்பட்டுள்ள இந்த மிரட்டலால் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



அணு ஆயுதம் கொண்டு தாக்குவோம் என்றெல்லாம் பாகிஸ்தானைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் இந்தியாவுக்கு மிரட்டல் விடுக்கக் கூடாது. மற்றொரு நாட்டைச் சேர்ந்த அப்பாவி மக்களை கொன்றால், அதை பார்த்துக் கொண்டு யாரும் அமைதியாக இருக்க மாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

- ஒவைசி



ஒருகாலத்தில் பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஒவ்வொருமுறை உரையாற்றும்போதும் நான் பரிந்துரைத்தேன். ஆனால், இனியொரு பஹல்காம் தாக்குதல் நடக்காத அளவில் பாகிஸ்தானுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட வேண்டும் என்பதையே மக்கள் தற்போது விரும்புகின்றனர்.

- பரூக் அப்துல்லா



தற்போது பாகிஸ்தானில் உள்ள மேற்கு பஞ்சாப், பலுசிஸ்தான், சிந்து, பஷ்துனிஸ்தான் போன்ற பகுதிகள் கிளர்ச்சியில் உள்ளன. இந்தியா எதிர்கொள்ள வேண்டியது எஞ்சிய பாகிஸ்தானையே. எனவே, ஒரே வழி, அந்த எஞ்சிய பாகிஸ்தானை இந்தியா முற்றிலும் அழித்துவிட வேண்டும். இதுவே இந்தியாவுக்கு அமைதியை பெற உள்ள வழியாகும்.

- சுப்ரமணியன் சுவாமி



பஹல்காம் தாக்குதல் தொடர்பான நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அனைத்து தலைவர்களும் கலந்து கொண்டபோதும், பீகாரில் பிரதமர் உரையாற்றியது நாட்டின் துரதிர்ஷ்டம். மோடி பணவீக்கத்தையும் வேலையின்மையையும் கொடுத்தார். பிரதமர் மோடியின் 56 அங்குல மார்பு தற்போது சுருங்கிவிட்டது.

- கார்கே

# திருச்சி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் மா.பிரதீப் குமார் தலைமையில் நடைபெற்றது



**திருச்சி,ஏப்.29-**

திருச்சிராப் பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் மா.பிரதீப் குமார், தலைமையில் (28.04.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், சாதிச் சான்றுகள், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வீடு ஒதுக்கீடு தொடர்பான மனுக்கள், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வேண்டி மனுக்கள், முதியோர் உதவித் தொகை, விதவை உதவித்தொகை, விபத்து நிவாணத்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை மற்றும் நலிந்தோர் நலத்திட்ட உதவித்தொகைகள் பெறுவது தொடர்பான மனுக்கள், தெருவிளக்கு, தண்ணீர் இணைப்பு குழாய், தொகுப்பு வீடு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டுவது தொடர்பான மனுக்கள், கல்வி உதவித்தொகை, வங்கி கடன், 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட உதவிகள், தையல் இயந்திரம், சலவைப்பெட்டி வேண்டி விண்ணப்ப மனுக்கள் மேலும் ஒய்வூதிய பயன், தொழிலாளர் நல வாரியம் தொடர்பான மனுக்கள், வேலை வாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 457 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

(28.04.2025) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 7500 மதிப்பீட்டில் காதொலிக்கருவிகளும், மாவட்ட ஆட்சித்தலைவரின் தன்விருப்ப நிதியிலிருந்து 1 பயனாளிக்கு தலா ரூபாய் 2000 க்கான காசோலையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் ரூபாய் 6,700 மதிப்பீட்டில் 2 பயனாளிகளுக்கு விலையில்லா எரிவாயு சலவைப் பெட்டிகளையும் கலெக்டர் மா.பிரதீப்குமார், வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ர.ராஜலட்சுமி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை கலெக்டர் க.நல்லையா, துணை கலெக்டர் (அகதிகள் முகாம்) நஜிம் முனிசா, உதவி ஆணையர் (கலால்) உதயக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் எஸ்.ஜெயசித்ரகலா, மாவட்ட வழங்கல் அலுவலர் ஸ்ரீராம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் இரா.இரவிச்சந்திரன், அரசுத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது.



**தஞ்சாவூர்,ஏப்.29-**

தஞ்சாவூர் மாவட்டம் கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் (28.04.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்விக் கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 710 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட கலெக்டர் அவர்களிடம் வழங்கினார்கள். இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு

சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், உத்தரவிட்டார்கள். பின்னர் தாட்கோ சார்பில் தூய்மைப்பணியாளர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்யப்பட்ட கலைச்செல்வி என்பவர் தனது மகள் மேல்நிலை படிப்பு பயின்று தேர்ச்சி பெற்றதற்கான கல்வி உதவித்தொகை ரூ.1500/- காசோலையும், தஞ்சாவூர் வட்டத்தை சேர்ந்த செல்வநாதன் ஆரோக்கியசாமி என்பவர் சவுதி அரேபியா நாட்டில் இறந்ததையடுத்து அவருக்கு சேர வேண்டிய சட்டபூர்வ நிலுவைத் தொகை ரூ.4,77,937/- காசோலையை அவருடைய குடும்ப உறுப்பினரிடம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் , தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மணிமாறன் , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ரவிச்சந்திரன் , மாவட்ட வழங்கல் அலுவலர் சுப.கமலகண்ணன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் டவுன் உப்போடை நாகமுத்துமாரியம்மன் கோயில் சித்திரை பெருந்திருவிழா



**பெரம்பலூர்,ஏப்.29-**

பெரம்பலூர் மாவட்டம் டவுன் எளம்பலூர் ரோடு உப்போடையில் அமைந்துள்ள அருள் பாலித்து வரும் ஸ்ரீ நாகமுத்து மாரியம்மன் மற்றும் பரிவார தெய்வங்கள் ஸ்ரீ செல்வகணபதி, ஸ்ரீ பாலமுருகன், ஸ்ரீ முனிஷ்வரன், ஸ்ரீ எல்லை கருப்புசாமி ஆகிய தெய்வங்களுக்கு ஆண்டுதோறும் சித்திரை பெருந்திருவிழா நடைபெறும் இத்திருவிழாவில் சித்திரை மாதம் 12ம் தேதி முகூர்த்த கால் நடுதல், காப்பு கட்டுதல்,சக்தி அழைத்தல், அன்று அம்மன் வீதி உலா வருதல் மற்றும் வானவேடிக்கை அடுத்த நாள் சித்திரை 13ம் தேதி ஸ்ரீ நாகமுத்துமாரியம்மன் ஊஞ்சலில் தாலாட்டுதல், அன்னதானம் அன்று மாலை அம்மனுக்கு பொங்கல் வைத்து மகா தீபாரதனை அதை தொடர்ந்து சித்திரை மாதம் 14ம் தேதி பால்குடம், அக்னி சட்டி, அலவு குத்துதல், மாவிளக்கு பூஜை நடைபெறும் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்மனின் அருளை பெறுமாறு கோயில் நிர்வாகிகள் மற்றும் உப்போடை கிராம பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# நாகை அருகே திருச்செங்காட்டங்குடி உத்திராபதீஸ்வரர் கோயிலில் அமுது படையல் விழா

**நாகப்பட்டினம்,ஏப்.29-**

திருச்செங்காட்டங்குடி உத்திராபதீஸ்வரர் கோயிலில் அமுது படையல் விழா ஞாயிற்று கிழமை தொடங்கி திங்கள் கிழமை அதிகாலை நிறைவடைந்தது.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருச்செங்காட்டங்குடியில் உத்திராபதீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. பல்லவ மன்னனின் படைத் தளபதியாக இருந்து சிவத்தொண்டராக மாறிய பரஞ்சோதி என்ற சிறுத்தொண்ட நாயனார் அவதரித்த தலம் இது.

சிறுத்தொண்டரின் சிவபக்தியை வெளிப்படுத்த பிள்ளைக் கனியமுது கேட்டு இறைவன் சிவபெருமான் திருவிளையாடல் நிகழ்த்தி சிறுத்தொண்டருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் காட்சியளித்த இத்தலத்தில் இறைவன் பிள்ளைக் கனியமுது கேட்ட ஐதீக நிகழ்வு, சித்திரை பரணி பெருவிழா அமுது படையல் நிகழ்ச்சியாக கொண்டாடப்படுகிறது. நிகழாண்டுக்கான சித்திரை பரணி பெருவிழா கடந்த 22- ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நிகழ்ச்சியாக தினமும் காலையில் பஞ்ச மூர்த்திகள் வீதியுலாவும், இரவில் வெவ்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலாவும் நடைபெற்றன.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான அமுது படையல் விழா ஞாயிற்றுக் கிழமை காலை தொடங்கியது. விழாவையொட்டி உத்திராபதீஸ்வரர் சுவாமிக்கு மகா அபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் அமுது கேட்க சிறுத்தொண்டர் மடத்துக்கு சுவாமி வெள்ளை சாற்றி புறப்பாடாகும் நிகழ்ச்சி நடைபெற்றது. இறைவனுக்கு சிறுத்தொண்டர் பிள்ளைக் கனியமுது படைத்த அமுது படையல் நிகழ்ச்சி திங்கள் கிழமை அதிகாலை சுமார் 2 மணிக்கு நடைபெற்றது. தொடர்ந்து இறைவன் சிவபெருமான் ரிஷப வாகனத்தில் காட்சியளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நாகை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த திரளான பக்தர்களும், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சிவத்தொண்டர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

வேளாக்குறிச்சி ஆதீனம் 18-வது குருமகா சன்னிதானம் சத்தியஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சாமிகள் மேற்பார்வையில் ஆதீன மஇளவரசு அஜபா நடேஸ்வர சாமிகள், கோயில் பொருளாளர் சுதாகர் மற்றும் ஊழியர்கள், கிராமவாசிகள் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்

# புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிட பணி

## செய்தியாளர்களுடன் சென்று கலெக்டர் மு.அருணா பார்வையிட்டார்



**புதுக்கோட்டை,ஏப்.29-**

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின்கீழ் ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணியினை செய்தியாளர்கள் பயணத்தின்போது, கலெக்டர் மு.அருணா, 24.04.2025 அன்று நேரில் பார்வையிட்டார்.

பின்னர், செய்தியாளர்கள் பயணத்தின்போது, கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் நலன் காத்திடும் வகையில் கிராமப்புறங்களில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கிராமப்புறங்களில் சாலை வசதி, மின் வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மேலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு விண்ணப்பிக்க வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகவும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நல்ல காற்றோட்டமான அலுவலக சூழலில் பணியாற்ற ஏதுவாகவும், பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, அரிமளம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணி மற்றும் மழையளவு பதிவு செய்யும் கருவியினையும், செய்தியாளர்கள் பயணத்தின்போது நேரில் பார்வையிடப்பட்டது.

எனவே, தமிழக அரசின் மூலம் கட்டப்பட்டுவரும் இந்த புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடப் பணியினை தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்திட வேண்டும் எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்தார்.

இந்த செய்தியாளர்கள் பயணத்தின்போது, அரிமளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணராஜா, பால் பிரான்சிஸ், உதவிப் பொறியாளர் முத்துகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# பெரம்பலூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் நடைபெற்றது



**பெரம்பலூர்,ஏப்.29-**

மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் கிரேஸ் பச்சாவ், தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் (28.04.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் இருக்கும் இடத்திற்கே கலெக்டர் வந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.6,700 வீதம் ரூ.13,400 மதிப்பீட்டில் LPG துணி தேய்ப்பு பெட்டிகளை கலெக்டர் வழங்கினார். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் இதுவரை சாதாரண தேய்ப்புப்பெட்டிகள் வழங்கப்பட்டு வந்த நிலையில்,

தற்போது எரிவாயு மூலம் இயங்கக் கூடிய தேய்ப்பு பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இதில் தேய்ப்புப்பெட்டிகளுடன், எரிவாயு சிலிண்டர்களும் வழங்கப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்கள், மக்கள் தொடர்பு திட்ட முகாம்கள் மற்றும் கடந்த வாரங்களில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், ஒரு மாதத்திற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்படாத மனுக்களின் விவரங்களையும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கலெக்டர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, தொழில் தொடங்க கடன் உதவி, வீட்டுமனைப்பட்டா, விதவை உதவித்தொகை, ஆதரவற்றவற்றோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், கல்விக் கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், கலைஞர் மகளிர் உரிமை தொகைத் திட்டம், கலைஞர் கனவு இல்லம் திட்டம், அடிப்படை வசதிகள் கோருதல் உட்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கலெக்டர் , விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும், மாற்றுத்திறனாளிகள் மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்திடுமாறும், அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 287 மனுக்கள் பெறப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை கலெக்டர் சொர்ணராஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுரேஷ்குமார், ஆதிதிராவிடர் நல அலுவலர் வாசுதேவன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுந்தரராமன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 309 மனுக்கள் பெறப்பட்டன

## கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீ காந்த் தகவல்



**மயிலாடுதுறை,ஏப்.29-**

மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து பொதுமக்கள் வருகை புரிந்து கலெக்டர் அவர்களிடம் மனுக்களை அளித்தனர். இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனை பட்டா மற்றும் பட்டாமாறுதல் கோரி 26, மனுக்களும், வேலை வாய்ப்பு கோரி 40 மனுக்களும், ஆக்ரமணம் அகற்ற கோரி 07, முதியோர், மாற்றுத்திறனாளிகள், மற்றும் விதவை உதவித்தொகை கோரி 23 மனுக்களும், பல்வேறு புகார்கள் தொடர்பாக மனுக்கள் 14 மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, வங்கிகடன், மாற்றுத்திறனாளி உபகரணங்கள் கோரி 26 மனுக்களும், அடிப்படை வசதி கோரி 25 மனுக்களும், நில அபகரிப்பு மற்றும் நில பிரச்சனை தொடர்பாக 14 மனுக்களும், கலைஞர் உரிமைத்தொகை வேண்டி 43 மனுக்களும், தொழிற்கடன் வழங்க கோரி 15 மனுக்களும், கான்கிரீட் வீடு வேண்டி 25, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் தொடர்பாக 11, குடும்ப அட்டை தொடர்பாக 05, சட்டம் ஒழுங்கு தொடர்பாக 25, தொழிலாளர் நலன் தொடர்பாக 02, மது விற்பனை செய்து திருந்தி வாழ்வோர் மறு வாழ்வு உதவி 02, குவாரி தொடர்பாக 01, மருத்துவ காப்பீடு தொடர்பாக 05, வங்கி சேவை தொடர்பான மனுக்கள், மற்றும் இதர கோரிக்கை தொடர்பான மனுக்கள் 18 என மொத்தம் 309 மனுக்கள் பெறப்பட்டன.

இம்மனுக்களை கலெக்டர் சம்மந்தப்பட்டதுறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். மேலும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விபரத்தை மனுதாரர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என கலெக்டர் தெரிவித்தார்.

பின்னர், மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் தாட்கோ சார்பில் 20 தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டைகளையும், ஒரு தூய்மைப்பணியாளருக்கு ரூ.1500-க்கான கல்வி உதவித்தொகையினையும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 12 திருநங்கைகளுக்கு அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகளையும், மாவட்ட ஆட்சியரின் தன் விருப்ப நிதியிலிருந்து பயனாளிக்கு ஒருவருக்கு ரூ.8650 மதிப்பில் தையல் இயந்திரத்தையும், வேளாண்மை துறை சார்பில் தனியார் உரம் விற்பனை நிறுவன உரிமையாளர் 4 நபர்களுக்கு விற்பனை இயந்திரங்களையும் மாவட்ட கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் வழங்கினார்.

இக் கூட் டத் தில், வேளாண்மை துறை இணை இயக்குநர் சேகர் தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) உமாமகேஷ்வரன் மாவட்ட சமூகநல அலுவலர் .சுகிர்தா தேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துவடிவேல் மாவட்ட தாட்கோ மேலாளர் செல்வகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) மணிகண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வரும் ஜூன் மாதம் மரக்கன்று நடும் மாதமாக அறிவிக்க வேண்டும்

## தமிழக அரசுக்கு பாலம் சேவை நிறுவனம் கோரிக்கை

**திருவாரூர்,ஏப்.29-**

வரும் ஜூன் மாதம் மரக்கன்று நடும் மாதமாக அறிவிக்க வேண்டும் தமிழக அரசுக்கு பாலம் சேவை நிறுவனம் கோரிக்கை.இது குறித்து தமிழக முதல்வருக்கு பாலம் செந்தில்குமார் அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது,கடந்த மூன்று வருடங்களாக வளிமண்டல வெப்பம் படிப்படியாக அதிகரித்து வருகிறது இன்னும் பத்து வருடத்திற்குள் வெயிலின் தாக்கம் தற்போதுள்ள அளவை விட ஒரு மடங்கு அதிகரிக்கும். அதை மனிதர்களால் தாங்க இயலாது. குழந்தைகளையும், நோயாளிகளை காப்பாற்றுவது சிரமம். இந்த வருடமே ஒவ்வொரு ஊரிலும் குழந்தைகளுக்கு கொடும் வெயிலால் கோடை கொப்புளம்,காய்ச்சல் வந்தவண்ணம் உள்ளது என மருத்துவ ஆய்வுகள் சொல்கிறது.காட்டுவிலங்குகள்,பறவைகள்,சிறிய உயிரினங்கள் இனப்பெருக்கம் பாதிக்கப்படும்,நீர் நிலைகளில் மீன்வளம் குறையும், நிலத்திலுள்ள நன்மை செய்யும் பூச்சிகள்,மண்புழு அழியலாம் இதனால் பல்லுயிர் பெருக்கம் பாதிக்கப்படும், உணவு சங்கிலி தடைபடும், விவசாயத்தில் மகசூழ் குறையலாம் என வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.எனவே வளிமண்டலத்தை குளிர்விக்க மரம் நடுவதே மிகச்சிறந்த தீர்வு, எனவே அதற்கான பணியை இப்போதே தொடங்க வேண்டும் வரும் ஜூன் மாதம் முழுவதும் மரக்கன்று நடும் மாதமாக அரசு அறிவித்து அதற்கான பணியை முடுக்கிவிட வேண்டும், மக்கள் அவரவர் வீட்டை சுற்றி இடமிருப்பின் முடிந்த



அளவிற்கு மரங்களை நட வேண்டும்.அப்போது தமிழகத்தில் 10 கோடி மர கன்றுகள் நட இப்போதே திட்டமிட வேண்டும்.மரக்கன்றுகள் உற்பத்தியாளர்கள்,வன துறை, பள்ளி,கல்லூரி முதல்வர்கள், உயர் பதவிகளில் இருப்போர், பிரபலங்கள்,ஆன்மீக தலைவர்கள் அனைத்து மதங்களின் குருமார்கள்,கிராம தலைவர்கள், ஊர் த லை வர் கள், அனைத்து கட்சித் தலைவர்கள் , சேவை அமைப்புகள்,விவசாய சங்கங்கள்,மகளிர் குழுக்கள் என அனைவரும் ஒன்று கூடி செயல்படமுன் வருவோம்.பொது இடங்களில் ஆடு மாடுகள் கடிக்காத அதிக பயன் புங்கன் மரம்,நீர் வழித் தடங்களில் பூவரசு மரம், பனை மரம்,கறிவேப்பிலை, தேக் கு, கு மிழ், வேங்கை நாட்டு மா,பலா,அத்தி மரங்கள்,இவ்வாறு செய்வதால் இனி வரும் காலங்களில் உண்டாக இருக்கும் கோடை கால கடும் சூரிய வெப்ப அலைகளில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.மரக்கன்றுகள் நட ஜூன் மாதத்தில் தென்மேற்கு பருவ மழை பெய்ததும் மரம் நடும் பணியை அறிவிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# நாகப்பட்டினம் மாவட்ட வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் ப.ஆகாஷ் தலைமையில் நடைபெற்றது

**நாகப்பட்டினம்,ஏப்.29-**

நாகப்பட்டினம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்மக்கள் குறைதீர்;க்கும் நாள் கூட்டம்; கலெக்டர் ப.ஆகாஷ், தலைமையில் (28.04.2025) நடைபெற்றது.



வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன், உதவித்தொகை, குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு மற்றும் கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மொத்தம் 272 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

அதனை தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செவித்திறன் பாதிக்கப்பட்ட 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.14,000ஃ- மதிப்பீட்டில் திறன் பேசியையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,500ஃ- மதிப்பீட்டில் காதொலிகருவியினையும், 04 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.15,750- வீதம் ரூ.63,000- மதிப்பீட்டில் சக்கர நாற்காலியினையும், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.6,359- வீதம் ரூ.12,718- மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரங்கள் என மொத்தம் 08 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.93,218- மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார்.

அதனைதொடர்ந்து வேதாரண்யம் வட்டம் மூலக்கரை கிராமத்தைச் சேர்ந்த செந்தில் குமார் என்பவர் நீரில் மூழ்கி இறந்தமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து வரப்பெற்ற நிதி உதவி தொகை ரூ.1,00,000-க்கான காசோலையினை அவரது மனைவி சுதா என்பவரிடம் கலெக்டர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வ.பவணந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர்.கண்ணன், தனி துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) கார்த்திகேயன் மற்றும் அரசு அலுவலர்கள்; பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்ட மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் வ.மோகனச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது



**திருவாரூர்,ஏப்.29-**

திருவாரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் திங்கட்கிழமைதோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்றைய தினம் 28.04.2025 திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பொது மக்கள் பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, ஆக்கிரமிப்பு அகற்றுதல், கல்விக்கடன், வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த 324 மனுக்களை கலெக்டர் அவர்களிடம் அளித்தனர். பொதுமக்களிடம் விசாரித்து மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை வழங்கி குறித்த காலத்திற்குள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் 13 நபர்களுக்கு நவீன செயற்கை கால் ரூ.9,24,100- மதிப்பில் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில்மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராஜா, தனி துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) தையல்நாயகி உள்ளிட்ட பல்வேறு துறை அரசு உயர் அலுவலர்கள்; கலந்து கொண்டனர்.

# கும்பகோணத்தில் மூல ஜோதிர் லிங்கத்திலிருந்து உருவான லிங்கம்: நாளை தரிசிக்கலாம்

**தஞ்சாவூர்,ஏப்.29-**

ஆயிரம் ஆண்டுகளாக ரகசியமாக பாதுகாக்கப்பட்டு வரும் சோமநாதர் மூல முதல் ஜோதிர் லிங்கத்தின் பாகங்களில் இருந்து செய்யப்பட்ட சிறு சிறு ஜோதிர் லிங்கங்கள், வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கும்பகோணம் மூர்த்தி கலையரங்கத்தில், ஏப்ரல் 30ஆம் தேதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு திறந்து வைக்கிறார். தொடர்ந்து கூட்டு பிரார்த்தனையும் நடைபெறுகிறது.

1000 வருடங்களாக தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட ஒரு இரகசியம், ஸ்ரீஸ்ரீ ரவிஷங்கர் அவர்களால் வெளிகொண்டுவரப்பட்ட, புனித சின்னமான மூல முதலான சோம்நாத் ஜோதிர்லிங்கம் முதல் முறையாக இங்கு வரப்போகிறது.

கும்பகோணம் இந்த அரிய பெரும் ஆன்மீக நிகழ்வை ஏப்ரல் 30 ஆம் தேதி, பல்லாயிரக்கணக்கானோர், ஆனந்த மகா சத்சங்கத்தில் கலந்து கொள்ளும் தருணத்தை எதிர் கொள்ள போகிறது.

குருதேவர், அண்ணா பல்கலைக்கழகம் போன்ற 100 கல்வி நிறுவன தலைவர்களை சந்தித்து உரையாட உள்ளார், மேலும் ஹாப்பி பாபநாசம் ( மகிழ்வான பாபநாசம்) எனும் திட்டத்தையும் தொடங்கி வைக்க உள்ளார்.

26 ஏப்ரல் , கும்பகோணம்: இந்த மாநிலம், ஏப்ரல் 30 ஆம் தேதி, சர்வதேச ஆன்மீக குரு மற்றும் மனிதநேய தலைவர் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வருகையால் நிகழப் போகும் ஒரு ஆன்மீக மற்றும் கலாச்சார முக்கியத்துவ தருணத்தை, எதிர் நோக்கியிருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு பின் முதல் முறையாக மூல முதலான சோம்நாத் ஜோதிர்லிங்கத்தின் புனித நினைவு சின்னம். 1026 CE ஆம் ஆண்டு படையடுப்பில், சிதைக்கப்பட்டு வரலாற்றின் பக்கங்களில் மறைக்கப்பட்ட



உண்மை குருதேவரால் மக்கள் முன் வெளிப்படுத்தப்பட போகிறது.

சோம்நாத் ஆலயம் சூறையாடப்பட்ட போது, சில அக்னிஹோத்ரி பிராமணர்கள், துயரத்தால் மன வருத்தப்பட்டாலும் தங்களின் ஆழ்ந்த நம்பிக்கையால், சிதைக்கப்பட்ட ஜோதிர்லிங்கத்தின் சில பகுதிகளை பாதுகாத்து இரகசியமாக தமிழ் நாட்டிற்கு கொண்டு வந்தனர். பல தலைமுறைகளுக்கு பின், அமைதியான பக்தியுடன், இந்த லிங்கப்பகுதிகள் பண்டிட் சீதாராம் சாஸ்திரிகளின் குடும்பத்தில் பத்திரமாக சேர்க்கப்பட்டது. " நீங்கள் இதை பெங்களூருவில் இருக்கும் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ ரவிஷங்கரிடம் எடுத்து செல்லுங்கள், அவர் உங்களுக்கு உதவுவார்" என சாஸ்திரி அவர்களுக்கு காஞ்சி சங்கராச்சாரியரால் அறிவுறுத்தப்பட்டது.

இப்பொழுது, இந்தியாவின் ஆன்மீக பயணத்தில், மறைக்கப்பட்ட இந்த பக்கங்கள், முதல் முறையாக கடந்த கால நினைவு சின்னமாக அல்லாமல், காலத்தால் அழியாத பக்தியின் சின்னமாகவும் மற்றும், ஆன்மீக பாரம்பரியத்தை போற்றி பாதுகாப்பதை வெகு காலமாக வழக்கமாக கொண்ட இந்த மண்ணின் எடுத்துக்காட்டாகவும் வருகிறது.

ஏப்ரல் 30 ஆம் தேதி, கும்பகோணம் மூர்த்தி கலையரங்கம், ஹோம் கமிங்( வீட்டிற்கு வருகிறேன்) எனும் தலைப்புடன் கூடிய மிகப்பெரும் சத்சங்கத்தில் பல்லாயிரக்கணக்கான நெஞ்சங்களை ஒன்றிணைக்க போகிறது. குருதேவரின் தெய்வீக முன்னிலையில், நெஞ்சம் நெகிழும் இசையிலும், கூட்டு தியானத்திலும், புனித சின்னமான ஜோதிர்லிங்க பகுதிகள் தற்போது சிறு லிங்கங்களாக மாற்றப்பட்டு புனிதத்தோடும், மரியாதையோடும் பூஜை செய்யப்பட்டவைகளின் அதிர்வுகளும், இந்நிகழ்வில் பங்குபெறும் அனைவருக்கும் மிக பெரும் வரமாக அமைய போகிறது. தஞ்சாவூர் மகாராஜா உயர்திரு சிவாஜி ரஜத் போன்ஸ்லே சத்ரபதி அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள்.

அன்றைய காலை, குருதேவர் " எஜுகேட்டர்ஸ் மீட்கல் வியாளர் சந்திப்பு ) நிகழ்வில், அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட 100 கல்வி துறை தலைவர்களை சந்தித்து, வரும் தலைமுறையை, ஞானம், கருணை மற்றும் ஆன்ம பலத்தை மேம்படுத்துவதற்கும், அவர்களின் மனதை நிர்வகிக்கவும், அவர்களின் ஆளுமையை வடிவமைக்கவும். வருங்காலத்தில் ஒரு சிறந்த நேர்மறையான அதிர்வுகளை கொண்ட தலைவர்களாக வரவும் தேவையான ஒரு புதிய கண்ணோட்டம் மற்றும் நுண்ணறிவை பற்றி உரையாட இருக்கிறார்.

குருதேவர் மேலும் ஹாப்பி பாபநாசம் (மகிழ்வான பாபநாசம்) எனும் திட்டத்தையும் தொடங்கி வைக்கிறார். இத்திட்டம் பாபநாசம் மற்றும் சுற்றியுள்ள மக்களை, முழுமையான கல்வி, தொழில் பயிற்சி, மனநலன், இயற்கை வேளாண்மை, மற்றும் சமூக கலந்தாய்வுகள், மூலம் அவர்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிறது. இது ஒரு தெய்வீகமான இசைவான சமூகத்தை உருவாக்கும் ஒரு முயற்சியாகும்

# ஆன்லைன் மூலம் சைபர் குற்றவாளிகள் தமிழகத்தில் 2024ம் ஆண்டு பொதுமக்களிடம் ரூ.1,674 கோடி மோசடி

**சென்னை ஏப் 29-**

ஆன்லைன் மூலம் பொதுமக்களிடம் சைபர் குற்றவாளிகள் தமிழகத்தில் 2024ம் ஆண்டு மட்டும் ரூ.1,674 கோடி மோசடி செய்துள்ளனர். மேலும் குற்றவாளிகளின் 20,453 சிம்கார்டுகள் முடக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் நேற்று காவல்துறை மானிய கோரிக்கையின் போது தாக்கல் செய்யப்பட்ட கொள்கை விளக்க குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: ஆன்லைன் மூலம் பொதுமக்களிடம் பல்வேறு தவறான தகவல்கள் மூலம் பணம் மற்றும் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டதாக 2024ம் ஆண்டு சைபர் க்ரைம் உதவி எண் 1930க்கும் 2,68,875 அழைப்புகள் பெறப்பட்டுள்ளது. மேலும், 2024ம் ஆண்டில் நிதி மோசடிகளில் தொடர்பாக 34,392 புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேசிய இணையவழி குற்றத்தடுப்பு அறிக்கையில் 1,27,065 புகார்களும், அவற்றில் 4,326 புகார்கள் மீது எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 80,206 புகார்கள் மீது சிஎஸ்ஆர் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2024ம் ஆண்டு இணையவழி மோசடிகளில் ரூ.1,674 கோடி பொதுமக்கள் இழந்துள்ளனர். அதில் 772 கோடி முடக்கப்பட்டு, சுமார் ரூ.83.34 கோடி பாதிக்கப்பட்டவர்களுக்கு திருப்பி வழங்கப்பட்டது. மோசடி சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளிடம் இருந்து 20,453 சிம் கார்டுகள் முடக்கப்பட்டுள்ளன.மேலும் பல்வேறு சட்டவிரோத மற்றும் மோசடி இணையதளங்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கை மூலம் 52 இணைய தளங்கள், 274 யூடியூப் சேனல்கள், 837 பேஸ்புக் பக்கங்கள், 608 இன்ஸ்டாகிராம் பக்கங்கள், 55 டிவிட்டர் பக்கங்கள், 3 கூகுள் பிளேஸ்டோர் போலிகடன் செயலிகள் முடக்கப்பட்டுள்ளது.

மேலும், குற்றவாளிகள் பயன்படுத்திய 66,217 சர்வதேச செல்போன் கருவி அடையாள எண் (ஐஎம்இஐ) முடக்கப்பட்டு, 48,031 செல்போன்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 16,317 செல்போன்கள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை மருத்துவக்கல்லூரி மற்றும் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள்

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன்.பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தனர்



**சென்னை,ஏப்.29**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு ஆகியோர் (28.04.2025) சென்னை, அரசு மருத்துவக்கல்லூரி (ம) இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில், ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் செவி எலும்பு அறுவை சிகிச்சைப் பயிற்சி திறன் ஆய்வகத்தினை திறந்து வைத்து, காது, மூக்கு, தொண்டை பிரிவு முன்னாள் இயக்குநர் பேராசிரியர் மரு.முத்துக்குமார் அவர்கள் இயற்றிய செவி எலும்பு அறுவை சிகிச்சைப் பயிற்சி திறன் கையேட்டினை வெளியிட்டார்கள். பிறகு ரூ.14 இலட்சம் செலவில் பருவ வயதினர் சிகிச்சை மையத்தினை திறந்து வைத்து, ரூ.94 இலட்சம் செலவில் நீரிழிவு சிகிச்சை சிறப்பு மையத்தினை திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மூன்று புதிய சிகிச்சை அமைப்புகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையை பொறுத்தவரை, இந்திய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கான மருத்துவ கட்டமைப்புகளும், மருத்துவர்களின் எண்ணிக்கையும், புற நோயாளிகளின் எண்ணிக்கையும்,

உள்நோயளிகளின் எண்ணிக்கையும் அதிநவீன மருத்துவ உபகரணங்களும் இருந்து வருவதை நாம் அனைவரும் நன்றாக நன்கு அறிவோம். அந்த வகையில் இந்த மருத்துவமனையின் கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு செவி அறுவை சிகிச்சைக்கு செவி எலும்பின் அமைப்பு அதன் நுணுக்கமான உட்குறியல் மற்றும் கட்டமைப்புகள் பற்றிய முழுமையான புரிதலை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் இருக்கிற அரசு மருத்துவமனைகளில் பணிப்புரிகின்ற காது, மூக்கு,தொண்டை மருத்துவர்களின் அறுவை சிகிச்சை திறனை மேம்படுத்துகின்ற வகையில் செவி எலும்பு அறுவை திறன் ஆய்வகம் *TEMPORAL BONE DISSECTION SKILL LAB* ஒன்று ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த செவி எலும்பு அறுவை சிகிச்சை திறன் ஆய்வகம் என்பது ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இன்றைக்கு புதிதாக தொடங்கப்பட்டு தமிழ்நாட்டில் இருக்கின்ற பல்வேறு மருத்துவமனைகளில் தொடர்ச்சியாக இந்த மருத்துவ சேவை வழங்குதற்குரிய பயற்சி மருத்துவர்களுக்கு இங்கே வழங்கபட இருக்கிறது. தமிழ்நாட்டை பொருத்தவரை ஏற்கெனவே அரசு மருத்துவ கல்வி மருத்துவமனைகளில் காது வால் அறுவை சிகிச்சை *Cochlear implant* என்கின்ற காது வால் அறுவை சிகிச்சை என்று சொல்லகூடிய மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் செவி எலும்பு அறுவை சிகிச்சை ஆய்வகம் என்பது தமிழ்நாட்டில் ஒரு புதிய முயற்சி அந்த வகையில் தமிழ்நாட்டில் பணிபுரிகின்ற காது, மூக்கு, தொண்டை பிரிவு சிறப்பு மருத்துவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்குரிய ஆய்வகம் இன்று தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் வளரிளம் பருவத்தினருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சை பிரிவு இன்று தொடங்கப்பட்டுள்ளது. இருபாலருக்கும் வளரிளம் பருவத்தினருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சைப் பிரிவு ரூ.14 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. சனிக்கிழமைகளில் காலை 08 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறும். பொதுமருத்துவம், குழந்தை மருத்துவம், மகப்பேறியியல் மற்றும் மகளிர் மருத்துவம், மனநல மருத்துவம், ஊட்டச்சத்து மற்றும் தோல் மருத்துவம், பாலியல் ரீதியாக பரவும் நோய்த்தொற்று ஆகியவற்றினை உள்ளடக்கிய பல்துறை அணுகுமுறைகளை இந்த சேவை மையம் வழங்கும். மருத்துவமனைகளின் வரலாற்றில் *Clean Clinic* என்று சொல்லக்கூடிய வளரிளம் பருவத்தினருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சை பிரிவு இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் முதன்முறையாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இளைய சமுதாயத்தினரிடையே இருக்கின்ற மது, புகை மற்றும் போதை பழக்கங்களினால் ஏற்படும் அபாயம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையிலும், ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சிகள், பாலியல் ரீதியாக பரவும் நோய்த் தொற்றுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையிலும் இந்த அமைப்பு சிறப்பான வகையில் செயல்பட உள்ளது.

இன்னும் ஒரு கூடுதலாக CSR நிதி பங்களிப்புடன் ரூ.94 இலட்சம் செலவில் நீரிழிவு நோய்க்கான அதிநவீன வசதிகளுடன் கூடிய சிறப்பு பிரிவு இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், நோவோ நோட்ரிக்ஸ் கல்வி அறக்கட்டளை ஆகிய இரண்டு அமைப்புகள் சேர்ந்து ரூ.94 இலட்சம் செலவில் நீரிழிவு நோய்க்கான சிறப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. சமீபத்திய ICMR மதிப்பீட்டின்படி, தமிழ்நாட்டில் நீரிழிவு நோய் பாதிப்பு என்பது 10.4 சதவிகிதமாக இருந்து வருகிறது. எனவே நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் விழிப்புணர்வு, கூடுதல் சிகிச்சைகள் வழங்கிட பல்வேறு அதிநவீன வசதிகளுடன் கூடிய உபகரணங்கள், எக்கோ மற்றும் டாப்ளர் இயந்திரம் (கண் மருத்துவ பரிசோதனை உபகரணங்கள் திறன் பலகை போன்ற கற்பித்தல் உபகரணங்கள் நரம்பு கடத்தலை வேகத்தை ஆய்வு செய்யும் இயந்திரம், சர்கோபீனியா மதிப்பீட்டு கருவிகள் வலிமிகுந்த நீரிழிவு நரம்பியல் சிகிச்சைக்கான துடிப்புள்ள மின் காந்தப்புலம் சிகிச்சை, நீரிழிவு கால் விழிப்புணர்வு மற்றும் சிகிச்சை வசதிகள் மற்றும் யோகா சிகிச்சை (வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராம், துணை முதல்வர் மரு.கவிதா, நீரிழிவு நோயியல் துறை இயக்குநர் பேராசிரியர் மரு.தர்மராஜன், காது, மூக்கு, தொண்டை நிலைய இயக்குநர் பேராசிரியர் மரு.சுரேஷ்குமார், பேராசிரியர் மரு. பாரதிமோகன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

# கொடுங்கையூர் பகுதியில் ஜூஸ் கடையில் பணம் திருட்டு: ஒருவர் கைது

**சென்னை ஏப் 29-**

சென்னை, கொடுங்கையூர், திருவள்ளுவர் நகர், 3வது மெயின்ரோட்டில் வசித்து வரும் விக்னேஷ், என்பவர் எருக்கஞ்சேரி, ஜி.என்.டி. சாலையில் ஜூஸ் கடை வைத்து நடத்தி வருகிறார். இவர் கடந்த 22 ந் தேதி அன்று இரவு மேற்படி ஜூஸ் கடையை பூட்டிவிட்டு, மறுநாள் காலை பார்த்தபோது, யாரோ ஜூஸ் கடையின் ஷெட்டர் பூட்டை உடைத்து, கடையின் உள்ளே நுழைந்து, கல்லாவில் வைத்திருந்த பணம் ரூ.6,800/- திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து விக்னேஷ், கொடுங்கையூர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர். கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட ரோஹித், என்பவரை கைது செய்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி ரோஹித் மீது ஏற்கனவே கொலைமுயற்சி, கொள்ளை உட்பட 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.மேலும் மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட மற்ற தலைமறைவு குற்றவாளிகளை பிடிக்க தனிப்படை போலீசார் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.கைது செய்யப்பட்ட எதிரி ரோஹித், விசாரணைக்குப் பின்னர் நீசிறையில் அடைக்கப்பட்டார்.

# திருபுவனத்தில் சித்திரை மாத அமாவாசை வேள்வி பூஜை



**தஞ்சாவூர்,ஏப்.29-**

திருவிடைமருதூர் தாலுக்கா, திருபுவனத்தில் இந்திய பண்பாட்டு அமைப்பு அறக்கட்டளையின், அருள்மிகு ஆதிசக்தி ஞான பீடத்தில் சித்திரை மாதம் அமாவாசையை முன்னிட்டு ஆசிவக தமிழ் சித்தர் அருள்திரு கண்ணன் அடிகள் ஆசியோடு பெண்கள் ஏற்று நடத்திய அமாவாசை, சித்தர் மற்றும் மூலிகை வேள்வி பூஜை நடைபெற்றது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப. 171/2025**
**நாள் : 07.04.2025**

க.சிவதாஸ்,
த/பெ.கணேசன்,
19/1, மேலரோடு,
சுவாமிமலை.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் "அழகம்மாள்" என்பவர் கடந்த 12.06.2023 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

க.சிவதாஸ்,
மனுதாரர், சுவாமிமலை.

**சார் ஆட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப.எண். 237/2025**

R.தங்கபாலு, த/பெ.ரெத்தினம்,
73/3,கீழத்தெரு, நெடுவாசல்,
கோவிந்தகுடி,
வலங்கைமான் தாலுக்கா.
– மனுதாரர்
– எதிர் –
மாண்புமிகு சார் ஆட்சியர்
அவர்கள், கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாத்தா "பெரியசாமி" என்பவர் கடந்த 15.07.1997 மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி சார் ஆட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்து கொள்ளலாம். ஆட்சேபனை எதுவும் இல்லையெனில் ஒருதலைபட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

R.தங்கபாலு,
மனுதாரர், நெடுவாசல்.

**மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**
**இ.பி.நெ.172/2024**
**(மாண்புமிகு கரூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர் அ.வ.எண்.361/2022)**

ஆறுமுகம்,
த/பெ.கண்ணப்பன்,
காளியப்பனூர், 5–வது கிராஸ்,
தாந்தோணி கிராமம், கரூர் வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்/வாதி

முத்து,
த/பெ.வீரப்பன்,
எண்.18/1, வாஞ்சிநாதன் நகர்,
தாந்தோணிமலை, கரூர் வட்டம்,
கரூர் மாவட்டம்.
– எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வழக்கு வாதி மேற்படி பிரதிவாதிக்கு எதிராக மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர் முன்பாக தொடர்ந்த அ.வ.எண்.361/2022–ல் கடந்த 03.01.2024–ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற வேண்டி மேற்படி நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆஜராக எதிர்வரும் 13.06.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தனது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்திரவு ஏற்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

எஸ்.சொக்கலிங்கம்,B.Sc.,B.L.,
அட்வகேட், 210, நிஜாம் காலனி, புதுக்கோட்டை

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அறந்தாங்கி**
**ஒ.மு.எண்.626/2025/அ8**

கார்த்திகேயன்,
த.பெ.சண்முகசுந்தரம்,
234, புதுநகர்,
E.B.காலனி, திருவாரூர் வட்டம்,
திருவாரூர் மாவட்டம்.
–மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆவுடையார்கோயில்.
–எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் பாட்டி திருமதி "சந்திரோதயம்" என்பவர் கடந்த 01.12.2008 –ம் தேதியில் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் வட்டம், விளானூர் பஞ்சாயத்து, சௌந்திரநாயகிபுரம் கிராமம், பெருங்குடி என்ற முகவரியில் இறந்த விபரத்தினை அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்திரவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளனர். இதில் யாருக் கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பினை கண்ட 15 தினங்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர் சமூகம் முன்பாக ஆஜராகி தெரிவித்துக்கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகும்.என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கார்த்திகேயன்,
மனுதாரர், திருவாரூர்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அறந்தாங்கி**
**ஒ.மு.எண்.627/2025/அ8**

கார்த்திகேயன்,
த.பெ.சண்முகசுந்தரம்,
234, புதுநகர்,
E.B.காலனி, திருவாரூர் வட்டம்,
திருவாரூர் மாவட்டம்.
–மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆவுடையார்கோயில்.
–எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தாத்தா திரு. "முத்துவீரபெருமாள்" என்பவர் கடந்த 30.11.1969 –ம் தேதியில் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் வட்டம், விளானூர் பஞ்சாயத்து, சௌந்திரநாயகிபுரம் கிராமம், பெருங்குடி என்ற முகவரியில் இறந்த விபரத்தினை அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்திரவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளனர். இதில் யாருக் கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பினை கண்ட 15 தினங்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர் சமூகம் முன்பாக ஆஜராகி தெரிவித்துக்கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகும்.என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கார்த்திகேயன்,
மனுதாரர், திருவாரூர்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அறந்தாங்கி**
**ஒ.மு.எண்.628/2025/அ8**

கார்த்திகேயன்,
த.பெ.சண்முகசுந்தரம்,
234, புதுநகர்,
E.B.காலனி, திருவாரூர் வட்டம்,
திருவாரூர் மாவட்டம்.
–மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆவுடையார்கோயில்.
–எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் பாட்டி திருமதி "ருக்குமணி" என்பவர் கடந்த 01.05.1990–ம் தேதியில் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் வட்டம், விளானூர் பஞ்சாயத்து, சௌந்திரநாயகிபுரம் கிராமம், பெருங்குடி என்ற முகவரியில் இறந்த விபரத்தினை அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்திரவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளனர். இதில் யாருக் கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பினை கண்ட 15 தினங்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர் சமூகம் முன்பாக ஆஜராகி தெரிவித்துக்கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகும்.என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கார்த்திகேயன்,
மனுதாரர், திருவாரூர்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அறந்தாங்கி**
**ஒ.மு.எண்.629/2025/அ8**

கார்த்திகேயன்,
த.பெ.சண்முகசுந்தரம்,
234, புதுநகர்,
E.B.காலனி, திருவாரூர் வட்டம்,
திருவாரூர் மாவட்டம்.
–மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆவுடையார்கோயில்.
–எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் பாட்டி திருமதி "மீனாட்சி" என்பவர் கடந்த 28.12.1970–ம் தேதியில் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் வட்டம், விளானூர் பஞ்சாயத்து, சௌந்திரநாயகிபுரம் கிராமம், பெருங்குடி என்ற முகவரியில் இறந்த விபரத்தினை அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்திரவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளனர். இதில் யாருக் கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பினை கண்ட 15 தினங்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர் சமூகம் முன்பாக ஆஜராகி தெரிவித்துக்கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகும்.என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கார்த்திகேயன்,
மனுதாரர், திருவாரூர்.

### லக்னோ அணி மெதுவான பந்துவீச்சு:

# ரிஷப் பந்துக்கு ரூ. 24 லட்சம் அபராதம்



**மும்பை, ஏப்.29-**

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் பந்துவீசுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டதால் லக்னோ சூப்பர் ஜெயிண்ட்ஸ் அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**மெதுவான பந்துவீச்சு...**

மும்பை வான்கடே மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் மும்பை அணி பேட்டிங் செய்தது. இந்தப் போட்டியில் மும்பை அணி 215 ரன்கள் எடுத்த நிலையில், சேஸிங் செய்த லக்னோ 20 ஓவர்களின் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 54 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இந்தப் போட்டியில், முதலில் பந்துவீசிய லக்னோ அணி அதிக நேரம் எடுத்துக் கொண்டதால், ஐபிஎல் நடத்தை விதிகளின் பிரிவு 2.22ன் படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**ரூ. 24 லட்சம் அபராதம்...**

இது இரண்டாவது முறை என்பதால் ரிஷப் பந்துக்கு ரூ. 24 லட்சமும், இம்பேக்ட் வீரர் உள்பட அணியின் மற்ற வீரர்களுக்கு ரூ. 6 லட்சம் அல்லது போட்டி சம்பளத்தில் 25% அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, ஏப்ரல் 4 ஆம் தேதி மும்பை அணிக்கு எதிரான போட்டியில் தாமதமாக பந்துவீசியதற்காக லக்னோ அணியின் கேப்டன் பந்துக்கு ரூ. 12 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டது.

**ராஜஸ்தான் அணி...**

மேலும், இந்த சீசனில் மூன்றாவது முறையாக லக்னோ அணி மெதுவாக பந்துவீசும் பட்சத்தில் ரிஷப் பந்துக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்படும். ஏற்கெனவே இந்த சீசனில் ராஜஸ்தான் அணி இரண்டு முறை மெதுவாக பந்துவீசி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# அஸ்வினுக்கு பத்மஸ்ரீ விருது



**புதுடெல்லி, ஏப்.29-**

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் அஸ்வினுக்கு, பத்ம ஸ்ரீ விருதை வழங்கி ஜனாதிபதி திரவுபதி முர்மு கவுரவித்தார்.

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்களை கவுரவிக்கும் வகையில் இந்திய அரசின் சார்பில் பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதுகள் பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்ம ஸ்ரீ ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்றன. கலை, இலக்கியம், அறிவியல், மருத்துவம், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை புரிவோருக்கு ஆண்டு தோறும் இந்த விருதுகள் வழங்கப்படுகிறது.

பத்ம விருதுகள் ஆண்டு தோறும் குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்படுவது வழக்கமாக இருக்கும் நிலையில், கடந்த ஜனவரி 25ம் தேதி 2025-ம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்தது. அதன்படி, தமிழக கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வினுகு பத்ம ஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த பத்ம விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் அஸ்வினுக்கு, பத்ம ஸ்ரீ விருதை வழங்கி ஜனாதிபதி திரவுபதி முர்மு கவுரவித்தார்.

# ஆர்.சி.பி. அணிக்கு 7-வது வெற்றி

**புதுடில்லி, ஏப்.29-**

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 46-ஆவது ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸை வென்றது.

**டெல்லி பேட்டிங்...**

முன்னதாக டாஸ் வென்ற பெங்களூரு, பந்துவீசத் தயாரானது. டெல்லி இன்னிங்ஸை தொடங்கிய அபிஷேக் பொரெல் - பாப் டு பிளெஸ்ஸிஸ் கூட்டணி, 33 ரன்களுக்கு பிரிந்தது. பொரெல் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 28 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த கருண் நாயர் 4 ரன்களுக்கு நடையைக்கட்ட, 4-ஆவது பேட்டர் கே.எல். ராகுல் நிதானமாக ரன்கள் சேர்த்தார். டு பிளெஸ்ஸிஸ் 2 பவுண்டரிகளுடன் 22 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினார்.

**162 ரன்கள்...**

5-ஆவது வீரராக களம் புகுந்த கேப்டன் அக்ஸர் படேல் 15 ரன்களுக்கு முடித்துக் கொண்டார். அடுத்து வந்த டிரிஸ்டன் ஸ்டப்ஸ் அதிரடியாக ரன்கள் சேர்க்க, ராகுல் 3 பவுண்டரிகளுடன் 41 ரன்களுக்கு விக்கெட்டை இழந்தார். தொடர்ந்து ஆசுதோஷ் சர்மா 2, விப்ராஜ் நிகம் 12 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினர். கடைசியில் ஸ்டப்ஸ் 18 பந்துகளில் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 34 ரன்களுக்கு வீழ்ந்தார். டெல்லி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 162 ரன்கள் எடுத்தது. மிட்செல் ஸ்டார்க் 0, துஷ்மந்தா சமீரா 0 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பெங்களூரு பௌலர்களில் புவனேஷ்வர் குமார் 3, ஜோஷ் ஹேஸில்வுட் 2, யஷ் தயாள் மற்றும் க்ருணால் பாண்டியா ஆகியோர் தலா 1 விக்கெட் சாய்த்தனர்.

**கோலி - க்ருணால்...**

பின்னர் 163 ரன்களை நோக்கி விளையாடிய பெங்களூரு அணியில் ஜேக்கப் பெத்தெல் 12, தேவ்தத் படிக்கல் 0, கேப்டன் ரஜத் பட்டிதார் 6 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினர். 4-ஆவது விக்கெட்டுக்கு இணைந்த விராட் கோலி - க்ருணால் பாண்டியா இணை 119 ரன்கள் சேர்த்து அணியின் வெற்றிக்கு அடித்தளமிட்டது. இதில் கோலி 4 பவுண்டரிகளுடன் 51 ரன்களுக்கு ஆட்டமிழந்தார்.

**பெங்களூரு வெற்றி...**

முடிவில் க்ருணால் பாண்டியா 47 பந்துகளில் 5 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 73 ரன்கள் சேர்த்து அணியை வெற்றிக்கு வழிநடத்தி ஆட்டமிழக்காமல் இருந்தார். டிம் டேவிட் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 19 ரன்களுக்கு துணை நின்றார். பெங்களூரு 18.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ரன்கள் சேர்த்து வெற்றி பெற்றது. டெல்லி தரப்பில் அக்ஸர் படேல் 2, துஷ்மந்தா சமீரா 1 விக்கெட் வீழ்த்தினர்.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெங்களூரு | 10 | 7 | 3 | 14 | +0.521 |
| 2 | குஜராத் | 8 | 6 | 2 | 12 | +1.104 |
| 3 | மும்பை | 10 | 6 | 4 | 12 | +0.889 |
| 4 | டெல்லி | 9 | 6 | 3 | 12 | +0.482 |
| 5 | பஞ்சாப் | 9 | 5 | 3 | 11 | +0.177 |
| 6 | லக்னோ | 10 | 5 | 5 | 10 | -0.325 |
| 7 | கொல்கத்தா | 9 | 3 | 5 | 7 | +0.212 |
| 8 | ஐதராபாத் | 9 | 3 | 6 | 6 | -1.103 |
| 9 | ராஜஸ்தான் | 9 | 2 | 7 | 4 | -0.625 |
| 10 | சென்னை | 9 | 2 | 7 | 4 | -1.302 |

## இன்றைய ஐ.பி.எல் (48-வது லீக்)



**அணிகள் - டெல்லி vs கொல்கத்தா**

**இடம் - டெல்லி மணி - இரவு 7.30**

# மக்களை தேடி மருத்துவம் திட்டம் நாட்டின் அடையாளமாக மாறியுள்ளது

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, ஏப்.29-**

மக்களை தேடி மருத்துவம் திட்டம் இந்தியா முழுவதும் பொது சுகாதாரத்திற்கான அடையாளமாக மாறியுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:- மக்களை தேடி மருத்துவம் வெறும் சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதோடு மட்டுமல்லாமல் - அது பலனையும் அளித்து வருகிறது. மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம், தமிழ்நாடு 17% உயர் ரத்த அழுத்தம், 16.7% நீரிழிவு நோயும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பொது சுகாதார வெற்றி எவ்வாறு அளவிடப்படுகிறது என்பதை மறுவடிவமைக்கிறது.

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் அவர்களுக்காகக் காத்திருக்காமல் மக்களைச் தேடிச் சென்றடைவதன் மூலம் வெற்றிப்பெற்றுள்ளோம். இத்திட்டம் இந்தியா முழுவதும் பொது சுகாதாரத்திற்கான அடையாளமாக மாறியுள்ளது. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பொள்ளாச்சி பாலியல் வழக்கில் மே 13-ம் தேதி தீர்ப்பு: மகிளா கோர்ட்

**கோவை, ஏப்.29-**

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் மே 13ம் தேதி தீர்ப்பு வழங்குவதாக கோவை மகிளா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் சபரிராஜன், திருநாவுக்கரசு, சதீஷ்குமார், வசந்தராஜன், மணிவண்ணன், அருளானந்தம், பாபு, அருண்குமார் உள்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட நபர்கள் அனைவரும் சேலம் மத்திய சிறையில் உள்ளனர். பொள்ளாச்சி பாலியல் வழக்கு குறித்து சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டது. கடந்த ஒரு மாதமாக இரு தரப்புக்குமான விவாதம் நடைபெற்று வந்தது. இந்நிலையில், இந்த வழக்கு மீதான விசாரணை நிறைவடைந்த நிலையில் தீர்ப்பு வழங்குவதாக நீதிபதி நந்தினி தேவி உத்தரவிட்டுள்ளார்.

## புள்ளிப்பட்டியல்: ஆர்.சி.பி. முதலிடம்

நடப்பு ஐ.பி.எல். தொடரின் 46-வது லீக் ஆட்டம் டெல்லியில் நடந்தது. இதில் டெல்லி கேப்பிட்டல்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. முதலில் பேட் செய்த டெல்லி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 162 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து ஆடிய பெங்களூரு அணி 18.3 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 165 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், நடப்பு ஐ.பி.எல். தொடரில் எழுச்சி பெற்றுள்ள ஆர்.சி.பி. அணி தொடர்ந்து 6 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது. இதன்மூலம் புள்ளிப்பட்டியலில் முதல் இடத்துக்கு முன்னேறி அசத்தியது. 2வது இடத்தை குஜராத்தும், 3வது இடத்தை மும்பையும், 4வது இடத்தை டெல்லியும், பஞ்சாப் கிங்ஸ் 5வது இடத்தையும் பிடித்துள்ளது.

## மாட்ரிட் ஓபன்: ஜோகோவிச் தோல்வி

மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் முதல் சுற்றிலேயே முன்னிலை வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா) தோல்வி கண்டார். அடுத்த மாதம் 25-ம் தேதி பிரெஞ்சு ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டி தொடங்கவுள்ளது. இந்நிலையில் மாட்ரிட் ஓபன் போட்டியில் நோவக் ஜோகோவிச் பங்கேற்றார். முதல் சுற்றில் இத்தாலி வீரர் மேட்டியோ அர்னால்டியும், ஜோகோவிச்சும் மோதினர்.

இதில் அர்னால்டி 6-3, 6-4 என்ற நேர் செட்களில் ஜோகோவிச்சை வீழ்த்தினார். 15 நாட்களுக்கு முன்பு நடைபெற்ற மான்டி கார்லோ டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றிலும் ஜோகோவிச் முதல் சுற்றிலேயே தோல்வி கண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராகுலை நக்கல் அடித்த கோலி

டெல்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் ஐபிஎல் தொடரின் 46-வது லீக் ஆட்டம் நடைபெற்றது. இதில் டெல்லி கேப்பிட்டல்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இப்போட்டியில் முதலில் பேட்டிங் ஆடிய டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 162 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 163 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிங்கியபெங்களூரு அணி 18.3 ஓவரில் 165 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் பெங்களூரு அணி 7வது வெற்றியுடன் புள்ளிப்பட்டியலில் முதல் இடத்துக்கு முன்னேறியது.

இதனையடுத்து இது என்னோட ஹோம் கிரவுண்ட் என பெங்களூரு மைதானத்தில் கே.எல்.ராகுல் செய்த சைகையை டெல்லி மைதானத்தில் ஜாலியாக ரீ-க்ரியேட் செய்து விராட் கோலி கிண்டலடித்தார். முன்னதாக பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் டெல்லி கேபிடல்ஸ் அணி வெற்றி பெற்றது. அப்போட்டியில் 93 ரன்கள் குவித்து வெற்றிக்கு வித்திட்ட கே.எல்.ராகுல், தனது பேட்டை தரையில் வட்டமிட்டு அடித்து ஆக்ரோஷமாக கொண்டாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாதனை படைத்த புவனேஸ்வர்

18-வது ஐ.பி.எல். தொடரில், டெல்லியில் நேற்றிரவு நடந்த 46-வது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - டெல்லி கேப்பிடல்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் பேட்டிங் செய்த டெல்லி அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 162 ரன்கள் அடித்தது. அடுத்து 163 ரன் இலக்கை நோக்கி ஆடிய பெங்களூரு அணி 18.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 165 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் கைப்பற்றிய 3 விக்கெட்டுகளையும் சேர்த்து ஐ.பி.எல். தொடரில் புவனேஸ்வர் குமார் இதுவரை 193 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் 18 ஆண்டு கால ஐ.பி.எல். வரலாற்றில் அதிக விக்கெட் கைப்பற்றிய 2-வது வீரர் என்ற சாதனையை புவனேஸ்வர் குமார் படைத்துள்ளார்.

## மலிங்கா சாதனையை முறியடித்த பும்ரா

மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் 45-வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணியுடன் மோதியது. இப்போட்டியில் முதலில் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 215 ரன்கள் குவித்தது. இதனையடுத்து, 216 ரன்கள் என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய லக்னோ அணி 19 ஆவது ஓவரில் 161 ரன்கள் எடுத்து ஆல் அவுட்டானது. இதன்மூலம் 54 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் சிறப்பாக பந்துவீசிய பும்ரா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதன்மூலம் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய மலிங்காவின் சாதனையை பும்ரா முறியடித்துள்ளார். மும்பை அணிக்காக பும்ரா இதுவரை 174 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இதற்கு முன்பாக மும்பை அணிக்காக மலிங்கா 170 விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்ததே சாதனையாக இருந்தது.

# காவலர் நலனை தி.மு.க. அரசு பேணி பாதுகாத்து வருகிறது

### சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, ஏப். 29-**

காவல்துறைக்கு பல்வேறு நலத்திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். காவலர்களுக்கு வார விடுமுறை வழங்கப்படுகிறது. ஆனால் சில வேளைகளில் வார விடுமுறை அளிக்க முடியாமல் போய்விடுகிறது. அது உண்மைதான் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில், காவல் துறை மானியக் கோரிக்கையின் போது பேரவை உறுப்பினர் ம. சிந்தனை செல்வன் பேசியதற்கு, முதல்வர் மு.க. ஸ்டாலின் குறுக்கிட்டு அளித்த பதிலில், பேரவை உறுப்பினர் ம.சிந்தனை செல்வன் அவர்கள், இங்கு உரையாற்றுகிறபோது காவலர்கள் விடுமுறையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இரண்டாம் நிலை காவலர்கள் முதல் தலைமைக் காவலர்கள் வரை 4,48,983 நாட்கள் வார விடுமுறையும், எஸ். எஸ்.ஐ. மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 67,233 நாட்கள் விடுமுறையும் அளிக்கப்பட்டுள்ளது.

மிக முக்கியமான சட்டம்-ஒழுங்குப் பராமரிப்புப் பணிகள் உள்ள காலங்களில் மட்டும், தவிர்க்க இயலாத காரணங்களினால், சில வேளைகளில் வார விடுமுறை அளிக்க முடியாமல் போய்விடுகிறது என்று அவரே குறிப்பிட்டுச் சொன்னார். அது உண்மைதான். மற்றபடி வழக்கமான காலங்களில் வார விடுமுறை நடைமுறையிலிருந்து வருகிறது. அதேபோன்று, உறுப்பினர் ஊதிய முரண்பாடு பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார்.

அதைப் பொறுத்தவரையில், காவல் துறையில் காவல் ஆளிநர்களாகப் பணியமர்த்தப்பட்டு, பதவி உயர்வு மற்றும் பல்வேறு நிலைகளில் காவல் ஆளிநர்களுக்கு இடையேயான ஊதிய முரண்பாடுகள், ஊதியக் குழு அறிமுகத்தால் வரும் ஊதிய முரண்பாடுகள் தவிர்த்து, தொடர்பான கருத்துருக்கள் சம்பந்தப்பட்ட காவல் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

அதேபோன்று, காவலர்கள் பணி உயர்வு பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார். இதுதொடர்பாக, அந்தந்த காவலர்கள் பணியாற்றும் அந்தந்த மாவட்டம், மாநகரத்திலுள்ள காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆணையர்கள்தான் முடிவெடுக்க விதிகளில் இடம் உள்ளது. எனவே, மாநில அளவில் ஒரே வகையான மாநில மூப்பின் அடிப்படையிலே பதவி உயர்வு வழங்குவதற்கு தற்போதைய விதிகளில் இடம் இல்லாத நிலை நிலவுகிறது என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

# நடிகர் அஜித்குமாருக்கு பத்ம பூஷன் விருது வழங்கினார் ஜனாதிபதி திரௌபதி முர்மு



**புதுடெல்லி, ஏப்.29-**

நடிகர் அஜித்குமாருக்கு, ஜனாதிபதி திரௌபதி முர்மு பத்ம பூஷன் விருது வழங்கி கவுரவித்தார்.

பத்ம விருதுகள் ஆண்டு தோறும் குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்படுவது வழக்கம். இந்த விருதுகள் பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்றன. பொது சேவை மற்றும் முக்கிய துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களை கவுரவிக்க இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த சூழலில் 2025ம் ஆண்டுக்கான பத்மபூஷன் விருதுகளை மத்திய அரசு கடந்த ஜனவரி 25-ம் தேதி அறிவித்தது.

அதன்படி, தமிழகத்தை சேர்ந்த 3 பேருக்கு பத்மபூஷன் விருது அறிவிக்கப்பட்டது. அதில் நடிகரும் கார் ரேசருமான அஜித்குமார், நடிகையும் பரதநாட்டிய கலைஞருமான ஷோபனா சந்திரகுமார், தொழிலதிபர் நல்லி குப்புசாமி ஆகியோருக்கு மத்திய அரசு பத்மபூஷன் விருது அறிவித்தது. மேலும் தமிழகத்தைச் சேர்ந்த கலைஞர் வேலு ஆசான், கிரிக்கெட் வீரர் அஸ்வின் உள்ளிட்டோருக்கு பத்ம ஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டன.

டெல்லியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொள்ள அஜித் குமார் நேற்று முன்தினம் தனது குடும்பத்தினருடன் டெல்லி சென்றிருந்தார். இந்த நிலையில், டெல்லி ஜனாதிபதி மாளிகையில் நேற்று விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. நிகழ்வில், ஜனாதிபதி திரௌபதி முர்மு நடிகர் அஜித் குமாருக்கு பூத்ம பூஷண் விருதை வழங்கினார். விருதுபெற்ற புகைப்படங்களை அஜித் ரசிகர்கள் பெரிதாக வைரலாக்கி வருகின்றனர்.

# பாகிஸ்தானின் 16 யூடியூப் சேனல்கள் முடக்கம்: மத்திய அரசு நடவடிக்கை

**புதுடில்லி, ஏப்.29-**

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தானின் 16 யூடியூப் சேனல்களை முடக்கம் செய்து மத்திய உள்துறை அமைச்சகம் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்த நிலையில், பாகிஸ்தான் அரசின் எக்ஸ் சமூக வலைதள பக்கம் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானை சேர்ந்தவர்களால் நடத்தப்படும் 16 யூடியூப் சேனல்களும் முடக்கப்பட்டுள்ளன.

அதன் விபரம் பின்வருமாறு: டான் நியூஸ், இர்ஷாத் பட்டி, சமா டிவி, ஆரி நியூஸ், போல் நியூஸ், ராப்டர், தி பாகிஸ்தான்ரிபிரன்ஸ், ஜியோ செய்திகள், சமா ஸ்போட்ஸ், ஜி.என்.என்., யூசார் கிரிக்கெட், உமர் சீமா எக்ஸ்குளூசிவ், அஸ்மா, முனாப் பரூக், சனோ நியூஸ் எச்.டி., ராசி ராமா, இவை அனைத்தும் பாகிஸ்தானை சேர்ந்த தனி நபர்கள் மற்றும் செய்தி நிறுவனங்களால் நடத்தப்படும் சேனல்கள் ஆகும். ஜம்மு காஷ்மீரில் நடந்த துயரமான பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் குறித்து ஆத்திரமூட்டும் வகையில் தவறான கருத்துகளை வெளியிட்டதால் முடக்கம் செய்து மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

### மேலும் 26 ரபேல் போர் விமானங்கள்:

# இந்தியா- பிரான்ஸ் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது

**டெல்லி, ஏப்.29-**

இந்தியா, பிரான்ஸ் இடையே 2016ம் ஆண்டு ரபேல் போர் விமானம் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தப்படி பிரான்சிடமிருந்து 36 ரபேல் போர் விமானங்களை இந்தியா கொள்முதல் செய்தது. இதனிடையே, பிரான்சிடமிருந்து மேலும் 26 ரபேல் போர் விமானங்களை வாங்க இந்தியா முடிவு செய்தது. இந்த போர் விமானங்களை வாங்குவது தொடர்பாக பிரதமர் மோடி தலைமையில் கடந்த 9ம் தேதி நடைபெற்ற மத்திய மந்திரி சபை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்நிலையில், பிரான்சிடம் இருந்து மேலும் 26 ரபேல் போர் விமானங்களை வாங்குவது தொடர்பான ஒப்பந்தம் நேற்று கையெழுத்தாகியுள்ளது. 64 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 26 புதிய ரபேல் போர் விமானங்கள் கொள்முதல் செய்யப்படுகிறது. இதற்கான ஒப்பந்தம் இந்தியா-பிரான்ஸ் அதிகாரிகள் இடையே காணொலி காட்சி மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியில் கையெழுத்தானது. இந்த நிகழ்ச்சியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார். இந்த ஒப்பந்தத்தில் இந்திய கடற்படைக்கு புதிய ஆயுதங்களையும் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில் 26 ரபேல் விமானங்களும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும் பட்சத்தில் இந்தியாவில் உள்ள ரபேல் போர் விமானங்களின் எண்ணிக்கை 62 ஆக அதிகரிக்கும்.

# சினிமா CiNi செய்திகள்

## ரசிகர்களுக்கு நன்றி சொன்ன தயாரிப்பாளர் தாணு



கடந்த காலங்களில் வெற்றி பெற்ற பல படங்கள் மறு வெளியீடு செய்வது சமீபத்திய ட்ரெண்டாக உள்ளது. இந்த வகையில், விஜய்யின் நடிப்பில் கடந்த 2005-ஆம் ஆண்டு வெளியான காதல் மற்றும் நகைச்சுவை திரைப்படமான 'சச்சின்' 20-ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஏப்ரல் 18-ஆம் தேதி உலகமெங்கும் 350-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் மறுவெளியீடாகி வெற்றி பெற்றதை கொண்டாடும் விதமாக படக்குழுவினரின் செய்தியாளர்கள் சந்திப்பு சென்னையில் கடந்த சனியன்று நடைபெற்றது. அப்போது படத்தின் தயாரிப்பாளர் கலைப்புலி எஸ்.தாணு பேசுகையில், உலகமெங்கும் 2005-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் தேதி வெளியிட்டேன். திரைப்படத்தை வாங்கிய அனைத்து விநியோகஸ்தர்களும் நல்ல வசூல் சாதனை செய்ததாக கூறினார்கள். 200 நாட்கள் கடந்தும் திரையரங்குகளில் ஓடி சாதனை படைத்தது,. இந்நிலையில், தற்போது 'சச்சின்' மறுவெளியீடு செய்த மறுநாள் என் குடும்பத்துடன் திரையரங்குக்கு சென்றேன். அப்படி ஒரு மக்கள் கூட்டத்தை நான் பார்த்ததில்லை. தயாரிப்பாளர்களுக்கு எந்த ஒரு சிரமமும் இல்லாமல், அவர்களை உயர்த்தி ஊக்குவிக்கும் நடிகர்களில் 'தளபதி' விஜய்யும் ஒருவர். 'சச்சின்' திரைப்படம் மீண்டும் வெற்றியடைய திரையரங்கு உரிமையாளர்களும் மிகப்பெரிய காரணம். மேலும் திரைப்படத்தை மக்களிடம் கொண்டு சேர்த்து, மிகப்பெரிய வெற்றியடைய செய்த ஊடக நண்பர்களுக்கும் ரசிகர்களுக்கும் மிக்க நன்றி.'' என்றார்.

## டூரிஸ்ட் ஃபேமிலி படத்தின் இசை வெளியீட்டு விழா



அறிமுக இயக்குநர் அபிஷன் ஜீவிந் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த திரைப்படத்தில் சசிகுமார், சிம்ரன், யோகிபாபு ,மிதுன் ஜெய் சங்கர், கமலேஷ், எம். எஸ். பாஸ்கர், ரமேஷ் திலக், பக்ஸ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். அரவிந்த் விஸ்வநாதன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்திருக்கிறார்.

தமிழகத்தில் அடைக்கலமாகும் ஈழ அகதிகளின் வாழ்வியலை மையப்படுத்திய இந்த திரைப்படத்தை மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் மற்றும் எம் ஆர் பி என்டர்டெயின்மென்ட் ஆகிய நிறுவனங்கள் சார்பில் தயாரிப்பாளர்கள் நாசரேத் பஸ்லியான்-மகேஷ் ராஜ் பஸ்லியான் மற்றும் யுவராஜ் கணேசன் ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கிறார்கள்.

வரும் மே முதல் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் இந்த திரைப்படத்தின் இசை மற்றும் முன்னோட்டம் வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. விழாவில் நடிகர் சசிகுமார் கலந்து கொண்டு பேசுகையில், எனக்கு ஜோடியாக சிம்ரன் நடிக்கிறார்கள் என்று சொன்னவுடன் உற்சாகமாகி விட்டேன். இந்தப் படத்திலும் அவர் ஹீரோயின். நான் ஹீரோ. இந்தக் கதை எனக்கு ஏன் பிடித்தது என்றால் இந்த கதையின் நாயகன் ஈழத்தமிழ் பேசுபவன். ஈழத்திலிருந்து ஒரு குடும்பம் இங்கு வந்து எப்படி தங்களுடைய வாழ்க்கையை எதிர்கொள்கிறார்கள் என்பதுதான் இப்படத்தின் கதை. இதை பார்க்கும் போது காமெடியாக இருக்கும். பொதுவாக ஈழத் தமிழர்களைப் பற்றிய படம் என்றால் அது சோகமாகவும், வலி மிகுந்ததாகவும் இருக்கும். ஆனால் இந்தப் படம் சந்தோசமாக இருக்கும். மக்களை - ரசிகர்களை சிரிக்க வைத்துக் கொண்டே இருக்கும். ஆனால் உள்ளுக்குள் ஒரு வலியையும் , விசயத்தையும் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். வலியை மறைத்து தான் நாம் சந்தோஷத்தை கொடுக்க முடியும். அந்த வகையில் இந்த டூரிஸ்ட் குடும்பம் உங்களுக்கு சந்தோஷத்தை கொடுத்துக் கொண்டே இருக்கும்.

இந்தப் படம் அன்பை போதிக்கிறது. மே மாதம் முதல் தேதி அன்று இப்படம் திரையரங்குகளில் வெளியாகிறது. வந்து பார்த்து ரசித்து ஆதரவு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்

## கேங்கர்ஸ் - விமர்சனம்



ஊர் தலைவர்களாக உள்ள மைம் கோபி அருள் தாஸ் சகோதரர்கள் பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களது செயல்களால் பள்ளியும், மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, மாணவிகள் சிலர் மாயமாகும் சம்பவங்களும் நடக்கிறது. இதனால், அங்கு நடக்கும் பிரச்சனைகள் குறித்து பள்ளி ஆசிரியை கேத்ரின் தெரசா போலிசில் புகார் செய்கிறார். அந்த புகாரின் பேரில் ரகசிய விசாரணை நடத்த போலீஸ் அதிகாரி ஒருவரை காவல்துறை அனுப்புகிறது. அதன்படி, உடற்பயிற்சி ஆசிரியராக பள்ளியில் புதிதாக சேரும் சுந்தர். சி, தன் அடையாளத்தை மறைத்துக் கொண்டு வில்லன் கோஷ்டியை வதம் செய்கிறார். எனவே அவர் தான் அந்த ரகசிய காவல்துறை அதிகாரி என்று நாயகி கேத்ரின் நினைத்துக் கொள்கிறார். ஆனால், ஒருகட்டத்தில் சுந்தர்.சி அந்த காவல்துறை அதிகாரி இல்லை, என்ற உண்மை தெரிய வருகிறது. அப்படி என்றால் சுந்தர்.சி யார்? அவர் எதற்காக வில்லன் கோஷ்டியை வதம் செய்கிறார் என்பதை சிரிப்பு சரவெடியாக சொல்வதே 'கேங்கர்ஸ்'. ஹீரோவாக மீண்டும் களம் காணும் சுந்தர்.சி, துணைக்கு வடிவேலுவை சேர்த்துக் கொண்டு தங்களது கூட்டணி வெற்றி கூட்டணி என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார்.


ஹீரோவுக்கான காதல் காட்சிகளை தவிர்த்திருக்கும் சுந்தர். சி, ஆக்‌ஷன் மற்றும் காமெடியில் பின்னியிருக்கிறார்.

உடற்பயிற்சி ஆசிரியராக நடித்திருக்கும் வடிவேலு, நகைச்சுவை புயலாக மீண்டும் மையம் கொண்டு மக்களை வயிறு வலிக்க சிரிக்க வைக்கிறார். வசனங்கள், உடல் மொழி என்று மீண்டும் பழைய ஃபார்முக்கு வந்திருக்கும் வடிவேலு, தான் எதிர்கொண்ட பந்துகள் அனைத்தையும் பவுண்டரியாக மாற்றி வெற்றி பெற்றுள்ளார். நாயகியாக நடித்திருக்கும் கேத்ரின் தெரசா, நடிப்பு, காதல், கவர்ச்சி அனைத்திலும் அசராமல் நடித்திருக்கிறார். பக்ஸ், முனீஷ்காந்த், சந்தான பாரதி, விச்சு என அனைவரும் ஒன்று சேர்ந்து காமெடி கேங்கர்ஸாக மாறி படம் முழுவதும் சிரிக்க வைக்கிறார்கள்.

சத்யாவின் இசை ஒகே ரகம். ஒளிப்பதிவாளர் இ.கிருஷ்ணா மூர்த்தி படம் முழுவதையும் கலர்புல்லாக காட்சிப்படுத்தியிருக்கிறார்.

வெங்கட் ராகவனின் திரைக்கதை மற்றும் வசனம் பாடல்கள் காட்சிகளுக்கான சத்துமிக்க உரமாக அமைந்திருப்பதோடு, பல திருப்பங்கள் மூலம் படத்தை சுவாரஸ்யமாகவும் நகர்த்திச் செல்கிறது. எழுதி இயக்கியிருக்கும் இயக்குநர் சுந்தர்.சி, தனது வழக்கமான பாணியில் கதையை நகர்த்திச் சென்றாலும், காட்சிக்கு காட்சி சிரிக்க வைப்பதோடு, பார்வையாளர்களின் யூகங்களை உடைத்து புதிய ரூட்டில் திரைக்கதையை பயணப்பட வைத்து படத்தின் சுவாரஸ்யத்தை அதிகரிக்கச் செய்கிறார். மொத்தத்தில், சிரிக்காதவர்களையும் சிரிக்க வைக்கிறார்கள் இந்த கேங்கர்ஸ் டீம்

## வல்லமை - விமர்சனம்



கிராமத்திலிருந்து சென்னைக்கு மகளுடன் வருகிறார் பிரேம்ஜி. மனைவி இறந்த நிலையில், தனது மகளை நன்றாக படிக்க வைத்து ஆளாக்க வேண்டும் என்பதற்காக சென்னைக்கு வந்து வாடகைக்கு வீடு எடுத்து மகளுடன் தங்கி வேலை செய்கிறார்.

ஒரு நாள் மகளின் உடல் நிலை பாதிப்பு தொடர்பாக மருத்துவரை சந்திக்கும் போது,

சிறுமி அவருக்கே தெரியாமல் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது. தன் மகளுக்கு நேர்ந்த அநீதி இனி யாருக்கும் நடக்க கூடாது, என்று எண்ணும் தந்தை பிரேம்ஜி, மகளை சீரழித்த குற்றவாளி யார்? என்பதை கண்டுபிடித்து அவரை கொலை செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார். குற்றவாளியை கண்டுபிடித்தார்களா? அவருக்கு என்ன நடந்தது என்பதை சொல்லும் படமே இந்த வல்லமை.

பிரேம்ஜி இப்படி ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க சம்மதித்தற்காகவே அவரை பாராட்டலாம். உணர்வுப்பூர்வமாக மற்றும் அழுத்தமான கதாபாத்திரத்தில் நடித்து அசத்தியிருக்கிறார். பிரேம்ஜியின் மகளாக நடித்திருக்கும் சிறுமி திவதர்ஷினி, தனக்கு நேர்ந்த கொடுமைக்கு எதிராக எடுத்த முடிவு அதிர்ச்சியளித்தாலும், அந்த குழந்தை முகத்தோடு அதற்கான காரணத்தை சொல்லும் போது, பார்வையாளர்களின் இதயத்தை கனக்கச் செய்து விடுகிறாள்.

முத்துராமன், சூப்பர் குட் சுப்பிரமணியம், சி.ஆர்.ரஜித் என அனைவரும் சிறப்பாக நடித்துள்ளனர். ஜி.கே.வியின் இசையும், சூரஜ் நல்லுச்சாமியின் ஒளிப்பதிவும் தந்தை மகளின் உணர்வுகளை நமக்கு கடத்திச் செல்கிறது. கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதி இயக்கி, தயாரிக்கவும் செய்திருக்கும் கருப்பையா முருகன், பெண் பிள்ளைகள் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் தற்போதைய காலக்கட்டத்தின் அவலத்தை மிக அழுத்தமாக பதிவு செய்திருக்கிறார்.

மொத்தத்தில், 'வல்லமைக்கு பாராட்டுக்கள்..

## ராமேஸ்வரத்தில் கடலில் இறந்து கரை ஒதுங்கிய ஜெல்லி மீன்கள்: மீனவர்கள் அச்சம்

**ராமநாதபுரம், ஏப். 29-**

ராமேஸ்வரம் கடலில் இறந்து கரை ஒதுங்கிய ஜெல்லி மீன்களால் மீனவர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

ராமேஸ்வரம் கடலில் திடீரென நூற்றுக்கணக்கான சொறி மீன் எனப்படும் ஜெல்லி மீன்கள், நேற்று முதல் கடற்கரையோரங்களில் இறந்து கரை ஒதுங்க துவங்கியுள்ளது. ஜெல்லி மீன்களில் பல வகைகள் உள்ளன. இது அகலம் 5 செ.மீ முதல் 3 அடி வரை இருக்கும்.

இதன் மொத்த உடற்பகுதியில் 5 சதவீதம் மட்டுமே திடப்பொருளாகும். மீதியனைத்தும் திரவப்பொருளான நீரால் இருக்கும். ராமேஸ்வரம் கடலில் தற்போது கரை ஒதுங்கும் ஜெல்லி மீன்கள் மனிதர்களுக்கு உடலில் அலர்ஜியை ஏற்படுத்தும் வகையை சேர்ந்தது. சேராங்கோட்டை முதல் கோதண்டராமர் கோயில் எதிரே கடற்கரை வரை 5 கி.மீ தூரத்திற்கு நூற்றுக்கணக்கான ஜெல்லி மீன்கள் கரை ஒதுங்கி கிடக்கின்றன. இதனால் அப்பகுதி மீனவர்களுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. மீனவர்கள் பலருக்கும் சொறி மீன் கடித்து அலர்ஜி ஏற்பட்டுள்ளதால் மீனவர்கள் பீதியடைந்துள்ளனர். மேலும், மீன் ஆராய்ச்சியாளர்கள் இதுகுறித்து ஆய்வு செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ராமேசுவரத்தில் தடை செய்யப்பட்ட 190 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல்

**ராமேஸ்வரம், ஏப். 29-**

ராமேஸ்வரத்தில் இலங்கைக்கு கடத்துவதற்காக வாகனத்தில் கொண்டு வந்த தடை செய்யப்பட்ட கடல் அட்டையை நேற்று போலீசார்கள் கைப்பற்றி இருவரை கைது செய்தனர்.

ராமேஸ்வரம் வர்த்தகம் தெரு பகுதியில் போலீசார் வாகன சோதனையில் நேற்று ஈடுபட்டு வந்தனர்.அப்போது அவ்வழியாக வந்த சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் 19 சாக்கு மூட்டைகளில் 190 கிலோ பதப்படுத்தப்படாத நிலையில் அரசால் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் இருந்தது தெரியவந்தது. அதன் பின்னர் போலிசார்கள் கடல் அட்டையை மற்றும் வாகனத்தை பறிமுதல் செய்து, ஓட்டுநர் மற்றும் கூட இருந்த ஒருவரை சேர்த்து இருவரையும் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை செய்தனர்.

விசாரணையில் இருவரும் ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தகள் எனவும், கடலட்டை சேகரித்து இலங்கை கடத்துவதற்காக வாகனத்தில் கொண்டு வந்ததாகவும் இதன் மதிப்பு குறைந்தபட்சம் ரூபாய் 4 லட்சம் வரை இருக்கும் என தெரியவந்தது.

அதற்கு பின்னர் போலீசார்கள் கடல் அட்டை மற்றும் வாகனம், இருவரையும் மண்டபம் வனச்சரக அதிகாரியிடம் ஒப்படைத்தனர். அங்கு வனச்சரக அதிகாரிகள் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றன.

## ஒய்.ஜி.மகேந்திரனின் 'டார்க் ஃபேஸ்'




ஒய்.ஜி.மகேந்திரன் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் 'டார்க் ஃபேஸ்' (Dark Face) என்ற கிரைம் சஸ்பென்ஸ் திரில்லர் இணையத் தொடர் விரைவில் வெளியாகவுள்ளது. The Chosen One நிறுவனம் சார்பில் அபு கரீம் இஸ்மாயில் தயாரித்துள்ள இந்த இணையத் தொடரை அறிமுக இயக்குநர் சரண்பிரகாஷ் இயக்கி இசையமைத்துள்ளார்.

பிரசாத் ஒளிப்பதிவு செய்துள்ளார். மூத்த வழக்கறிஞராக முதன்மை கதாபாத்திரத்தில் ஒய்.ஜி.மகேந்திரன் நடிக்கிறார், அவரது மகள் ஒய்.ஜி.எம். மதுவந்தி பெண்கள் விடுதியின் காப்பாளராக நடித்திருக்கிறார். இவர்களுடன் KPY ராஜவேல், சௌமியா, தயாரிப்பாளர் அபுகரீம் இஸ்மாயில், யெஸ்வந்த், சக்தி, சுனில் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். இந்நிலையில் இதன் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. விழாவில் லிங்குசாமி கலந்து கொண்டு படக்குழுவினரை வாழ்த்தினார். 'டார்க் ஃபேஸ்' இணையத் தொடர் குறித்து இதன் இயக்குநர் சரண்பிரகாஷ் பேசுகையில், "கற்பழிப்பு வழக்கில் ஒருவர் கைது செய்யப்படுகிறார். அவர் கற்பழித்ததாக சொல்லப்படும் பெண் திடீரென்று தூக்கிட்டு தற்கொலை செய்துக் கொள்ள, பாதிக்கப்பட்ட பெண் தரப்பில் இருந்து வாதாடும் மூத்த வழக்கறிஞர் குற்றவாளிக்கு தூக்கு தண்டனை வாங்கிக் கொடுக்கிறார். இதனால், அவர் கொண்டாடப்படுகிறார். அவருக்கு பல விருதுகளும் வழங்கப்படுகிறது.

இதற்கிடையே, தூக்கு தண்டனை நிறைவேற்றுவதற்கு சில தினங்கள் முன்பு தனக்கு தண்டனை வாங்கிக் கொடுத்த வழக்கறிஞரை சந்திக்க வேண்டும் என்ற தனது கடைசி ஆசையை கைதி தெரிவிக்க, அவரது ஆசைப்படி மூத்த வழக்கறிஞர் அவரை சந்திக்கிறார். அப்போது கைதி கூறும் சில விசயங்களால், குற்றமற்ற ஒருவருக்கு தான் தண்டனை வாங்கிக் கொடுத்ததை உணரும் வழக்கறிஞர், காவல்துறை மற்றும் பாதிக்கப்பட்ட பெண் தரப்பை தவிர்த்து விட்டு, கைதியின் கண்ணோட்டத்தில் வழக்கை பார்க்கும் போது, கற்பழிப்பு வழக்கு மற்றும் தற்கொலைக்கு பின்னால் மிகப்பெரிய சதித்திட்டமும், மர்மமும் நிறைந்திருப்பதை உணர்கிறார். அது என்ன? அதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது தான் மொத்த கதை என்றார். 7 எப்பிசோட்களும் யூகிக்க முடியாத திருப்பங்கள் நிறைந்தவையாக இருக்கும் என்றும் இயக்குனர் தெரிவித்தார்.

## தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தொழில் வர்த்தக பொருட்காட்சி 2025 நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழா



**மதுரை, ஏப் 29-**

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தொழில் வர்த்தகப் பொருட்காட்சி 2025, மதுரை தமுக்கம் மைதானத்தில் 23.04.2025 முதல் 27.04.2025 வரை 5 நாட்கள் மிகப்பிரமாண்டமாக நடைபெற்றது.

பொருட்காட்சியின் நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வினில், மதுரை மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன் மற்றும் மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினார்கள். சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் மெகா பம்பர் பரிசாக மதுரை நிப்பான் பர்னிச்சர் நிறுவனம் வழங்கிய ஹீரோ மோட்டார் சைக்கிள் ஒன்று, பம்பர் பரிசுகளாக மதுரை ஸ்ரீ பாண்டியன் மோட்டார்ஸ் நிறுவனம் வழங்கிய டிவிஎஸ் ஸ்கூட்டிஒன்று, சத்யம் குருப் ஆஃப் கம்பெனிஸ் வழங்கிய எலக்ட்ரிக் ஸ்கூட்டர் ஒன்று, மதுரை விங்ஸ் என்ஜினியரிங் கம்பெனி வழங்கிய எலக்ட்ரிக் ஸ்கூட்டர் ஒன்று, விக்னேஷ் பார்மா குரூப் வழங்கிய எல்.ஜி டபுள்டோர் பிரிட்ஜ்க்கான அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களை அறிவித்தவுடன், பரிசு பெற்றவர்கள் சீட்டினை காண்பித்து குதூகலத்துடன் தங்களுக்கான பரிசுகளை பெற்றுச்சென்றனர். இதில் தலைவர் என்.ஜெகதீசன்,

பொருட்காட்சித் தலைவர் எஸ்.பி.வரதராஜன், நிப்பான் தனுஷ்கோடி, செயலாளர் எஸ்.ஸ்ரீதர் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் உள்ளனர்.



**கோடை வெயிலில் பொதுமக்களின் தாகம் தீர்க்க மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அலுவலகம் முன்பு மாவட்ட மாணவரணி செயலாளர் ஏ.பார்த்திபன் ஏற்பாட்டில் மாநில இணை செயலாளர் பா.குமார் பொதுமக்களுக்கு நீர், மோர் வழங்கினார். இதில் மாவட்ட தலைவர் மார்க்கெட் மார்நாடு மற்றும் டேவிட் ரவி, பாரதிராஜா, விக்ரம், சிலம்பரசன், சிவா, செல்வபாண்டி, அஜித், கார்த்திக் உள்ளிட்ட மாணவரணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.**

## ரசிகர்கள் கொண்டாடுவதற்கான அனைத்து அம்சங்களும் 'ஹிட் -தி தேர்ட் கேஸ்' படத்தில் உள்ளது - நடிகர் நானி தகவல்



ரசிகர்கள் கொண்டாடுவதற்கான அனைத்து அம்சங்களும் 'ஹிட் - தி தேர்ட் கேஸ்' படத்தில் உள்ளது என நானி உறுதியளித்துள்ளார்.

நானி நடிப்பில் இயக்குநர் சைலேஷ் கொலானு இயக்கத்தில் வால் போஸ்டர் சினிமா மற்றும் யுனானிமஸ் புரொடக்‌ஷன்ஸ் ஆகிய நிறுவனங்களின் தயாரிப்பில் உருவாகியுள்ள 'ஹிட் -தி தேர்ட் கேஸ் ' எனும் திரைப்படம் வரும் மே மாதம் முதல் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய 4 மொழிகளில் வெளியாகிறது. இந்தத் திரைப்படத்தை தமிழில் சினிமாக்காரன் நிறுவனம் வெளியிடுகிறது. இந்நிலையில் சென்னையில் சமீபத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் படத்தின் நாயகன் நானி, நாயகி ஸ்ரீநிதி ஷெட்டி, விநியோகஸ்தர் வினோத் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். நடிகர் நானி பேசுகையில், 'ஹிட் தி தேர்ட் கேஸ்' படத்தை திரையரங்குகளில் பார்க்கும்போது ரசிகர்களுக்கு புதுவிதமான அனுபவம் கிடைக்கும் என்பதை மட்டும் உறுதியாக சொல்கிறேன்.

இந்தப் படத்தில் நான் நடித்திருப்பதற்காக மட்டுமல்ல.. இப்படத்தில் இடம் பிடித்திருக்கும் சில விசயங்கள் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும்.

இது ஒரு அரிதான திரில்லர் திரைப்படம். இன்வெஸ்ட்டிகேட் திரில்லர் ஜானரிலான இந்த திரைப்படத்தில் அமைந்திருக்கும் எல்லா விசயங்களும் உயர்தரம் கொண்டவை. அந்த வகையில் இந்த படம் மாஸான கமர்சியல் என்டர்டெய்னர். இந்தப் படம் வெளியான பிறகு நீங்களே உங்களுடைய நண்பர்களிடத்தில் படத்தைப் பற்றி சொல்லி, மீண்டும் மீண்டும் திரையரங்கில் வந்து பார்ப்பீர்கள் என்றார்.

## நத்தம் அருகே செல்போன் டவரில் இருந்த பேட்டரிகள், டீசல் திருட்டு

**நத்தம், ஏப். 29-**

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி அருகே கரிசல் பட்டியை சேர்ந்தவர் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தனியார் செல்போன் டவர்களை பராமரிக்கும் பணி காவலராக இருந்து வருகிறார்.

வாரம் ஒருமுறை பராமரிப்பு பணிக்கு செல்லும் இவர் நேற்று முன்தினம் நத்தம் அருகே எர்ரமநாயக்கன் பட்டி பகுதியில் உள்ள செப்போன் டவரில் பராமரிப்பு பணிக்காக சென்றார்.

அப்போது டவரில் இருந்த 23 பேட்டரிகள், 80 லிட்டர் டீசல் திருடு போயிருந்தது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அவர் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசில் புகார் செய்தார். அதன் பேரில் போலீஸ் - சப் - இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்



சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று 2025-2026-ம் ஆண்டிற்கான உள்துறை மானிய கோரிக்கையையொட்டி கூடுதல் தலைமைச்செயலாளர் தீரஜ்குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தீயணைப்புத்துறை இயக்குநர் சீமா அகர்வால், காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் சைலேஷ்குமார் யாதவ், மாநகர காவல் ஆணையர் ஆ.அருண், தடய அறிவியல் துறை இயக்குநர் வி.சிவப்பிரியா சந்தித்து வாழ்த்து பெற்றனர்.





சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று அவரது முகாம் அலுவலகத்தில், அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வனத்துறை மற்றும் காதித்துறை அமைச்சராக பொறுப்பேற்றதையொட்டி சந்தித்து புத்தகம் வழங்கி வாழ்த்து பெற்றார். மேலும் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூடுதலாக மின்சாரத்துறை அமைச்சராக பொறுப்பேற்றதை யொட்டி சந்தித்து புத்தகம் வழங்கி வாழ்த்து பெற்றார்.

## காஷ்மீர் பிரச்சனையில் மத்திய அரசுக்கு உறுதுணை:

# தமிழ்நாட்டில் ஒருபோதும் மதவாதம் நுழைய முடியாது

### சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை, ஏப். 29-

காஷ்மீர் பிரச்சனையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் தமிழ்நாடு நிச்சயமாக உறுதுணையாக இருக்கும் என்றுதான் நாங்கள் கூறியிருக்கிறோம். எனவே, எந்த காரணத்தைக் கொண்டு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மதவாதம் உள்ளே நுழைய முடியாது என்று பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று (ஏப்.28) பா.ஜ.க. உறுப்பினர் வானதி சீனிவாசன், தமிழ்நாடு பெண்களுக்கு பாதுகாப்பற்ற மாநிலமாக இருப்பதாக பேசியிருந்தார். அதற்கு அவை முன்னவர் துரைமுருகன், மற்றும் அமைச்சர் கீதா ஜீவன் ஆகியோர் பதிலளித்து பேசினர். இதைத் தொடர்ந்து பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: உறுப்பினர் வானதி சீனிவாசன் உரையாற்றியபோது ஆடிட்டர் ரமேஷ் தொடர்பான கொலை பற்றிக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அந்தக்கொலை என்பது அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடந்தது. அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதே போன்று, காஷ்மீரில் நிகழ்ந்தது போன்று நடக்கக்கூடாது என்று இங்கே பேசியிருக்கிறார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அது போன்று நிச்சயமாக நடைபெறவே நடைபெறாது என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். காஷ்மீரில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக பேசும்போதுகூட, மத்திய அரசினுடைய பாதுகாப்பு குறைபாடு பற்றி இதுவரை நாங்கள் பேசவில்லை.

அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், நான் தெளிவாகக் குறிப்பிட்டது என்னவென்று கேட்டால், காஷ்மீர் தொடர்பான பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசு எடுக்கக்கூடிய எந்த நடவடிக்கையாக இருந்தாலும், தமிழ்நாடு நிச்சயமாக உறுதுணையாக இருக்கும் என்றுதான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். எனவே, எந்தக் காரணத்தைக்கொண்டும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மதவாதம், உள்ளே நுழைய முடியாது, என்பதை நான் தெளிவோடு சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டை வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்ய வேண்டுமென்று பேசினார். அதற்காக உறுப்பினர் வானதி சீனிவாசனுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது பாராட்டுக்கு நன்றி. அதே நேரத்தில், நமது தமிழக அரசுக்கு மத்திய அரசினுடைய நிதி வராமல் இருக்கின்ற செய்தி உங்களுக்குத் தெரியும். இது வளர்ந்த நாடுகள் அளவிற்கு ஒப்பிட வேண்டுமென்று சொன்னால், இன்னும் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாங்கள் காத்திருக்கிறோம், தயாராக இருக்கிறோம்.

எனவே, நீங்கள் தயவு செய்து உங்கள் தலைமையிடத்திலே சொல்லி, அந்த நிதியைப் பெற்றுத் தருவதற்கான குரலைக் கொடுக்க வேண்டும் தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு வரவேண்டிய நிதி என்ன ஆனது? அதற்காக எவ்வளவோ குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான், நிதி கொடுக்கப்படும் என்று மத்திய அமைச்சரே இங்கு வந்து சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். நாடாளுமன்றத்திலும் இதற்காக நாங்கள் குரல் கொடுத்திருக்கின்றோம். அதற்காக வெளியிலே வந்து போராட்டமே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இதே சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டும் அனுப்பியிருக்கிறோம். இதெல்லாம் உறுப்பினர் வானதி சீனிவாசனுக்குத் தெரியாதா? எனவே, இப்பொழுதாவது இதுகுறித்துப் பேசிய காரணத்தாலே, நிதியைப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் உரிமையோடு குரல் கொடுத்து அதைப் பெற்றுத்தர வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.



சென்னை தலைமைச்செயலகத்தில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 18 முதுகலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித்துறை முதன்மைச்செயலாளர் பி.சந்தரமோகன், பள்ளி கல்வித்துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், பள்ளிக்கல்வி இணை இயக்குநர் ஞானகௌரி ஆகியோர் உடனிருந்தனர்.




தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தொழில் வர்த்தக பொருட்காட்சி நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழாவில் அனுமதி சீட்டின் பேரில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பம்பர் பரிசாக எலக்ட்ரிக் ஸ்கூட்டர் பரிசு பெற்றவருக்கு வாகனத்தின் சாவியினை நேற்று மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் வழங்கினார். அருகில் சங்கத்தலைவர் டாக்டர் என்.ஜெகதீசன், செயலாளர் எஸ்.ஸ்ரீதர் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடரில் சிறப்பாக மக்கள் பணியாற்றிய அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி கே.பழனிசாமிக்கு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

# அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு... (1-ம் பக்க தொடர்ச்சி)

காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசு அலுவலர்களுக்கான ஈட்டிய விடுப்பு சரண் செய்யும் நடைமுறையை, *01.04.2026* (அக்டோபர் மாதம்) முதல், *15* நாட்கள் வரை சரண் செய்து பணப்பலன் பெறும் வகையில் மீண்டும் செயல்படுத்திட *2025-2026*-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இருந்தாலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த அறிவிப்பை, இந்த ஆண்டே செயல்படுத்திட கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

### அக்டோபர் மாதம்...

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, ஈட்டிய விடுப்பு நாட்களில், *15* நாட்கள் வரை *1.10.2025* முதல் சரண் செய்து பணப்பயன் பெறலாம். இந்த அறிவிப்பின்படி, சுமார் *8* லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு *3* ஆயிரத்து *561* கோடி ரூபாய் கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

### 2-வது அறிவிப்பு:

*01-01-2025* முதல் *2* விழுக்காடு அகவிலைப்படியினை மத்திய அரசு அலுவலர்களுக்கு உயர்த்தி வழங்கிட அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், மாநில அரசுப் பணியாளர்களுக்கும் *01-01-2025* முதல் அகவிலைப்படி *2* விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வால் சுமார் *16* லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இந்த உயர்வினை நடைமுறைப்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு *1252* கோடி ரூபாய் கூடுதல் நிதி செலவிடப்படும்.

### 3-வது அறிவிப்பு:

அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், அவர்களுடைய குடும்பத்தினருடன் பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில், ஏற்கெனவே இதுவரை வழங்கப்பட்டு வரும் பத்தாயிரம் ரூபாய் பண்டிகை கால முன்பணம் தற்போது இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8 லட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்.

### 4-வது அறிவிப்பு:

அரசுப் பணியாளர்களுடைய குழந்தைகள் உயர் கல்வி பயில்வதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த அடிப்படையில், அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கல்வி முன்பணம் இந்த ஆண்டிலிருந்து தொழிற்கல்வி பயில ஒரு லட்சம் ரூபாயாகவும், கலை மற்றும் அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் பயில ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். இந்தக் கல்வி முன்பணம் உயர்வால் தங்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில விரும்பும் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்.

### 5-வது அறிவிப்பு:

அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், தமது பணிக்காலத்தில் தேவையின் அடிப்படையில் திருமண முன்பணமாக இதுவரை பெண் ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் மற்றும் ஆண்களுக்கு ஆறாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதனை பலமடங்கு உயர்த்தி அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் பொதுவாக ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

### 6-வது அறிவிப்பு:

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட *C* மற்றும் *D* பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழக அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால் சுமார் நான்கு லட்சத்து எழுபத்து ஓராயிரம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் சுமார் *24* கோடி ரூபாயாக இருக்கும்.

### 7-வது அறிவிப்பு:

ஓய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாக கொண்டாடிட, தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், நான்காயிரம் ரூபாயிலிருந்து ஆறாயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால், சுமார் *52* ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் பத்து கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

### 8-வது அறிவிப்பு:

அண்மையில், பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. பல்வேறு அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கையின் அடிப்படையில், இந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை செப்டம்பர் மாதம் *30*-ம் தேதிக்குள் சமர்ப்பித்திட அறிவுறுத்தப்படும்.

### 9-வது அறிவிப்பு:

திருமணமான அரசு பெண் பணியாளர்களுக்கு மகப்பேறுக்காக ஒன்பது மாத காலமாக இருந்த விடுப்பை *01.07.2021* முதல் ஓராண்டு காலமாக உயர்த்தப்பட்டு, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது உள்ள விதிகளின் படி மகப்பேறு விடுப்பு காலம் தகுதிக்காண பருவத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

இதன் காரணமாக அரசு பணிகளில் பணியாற்றி வரும் பல்லாயிரக்கணக்கான இளம் மகளிர் மகப்பேறு விடுப்பு எடுத்தால், தகுதிக்காண பருவம் உரிய காலத்திற்குள் முடிக்க இயலாமல் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன், பணிமூப்பினை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது.

மகளிர் முன்னேற்றத்திற்காக அனைத்து முயற்சிகளையும் எடுத்து வரும் இந்த அரசு, அரசுப் பணிகளில் பணியாற்றிவரும் மகளிரின் பணி உரிமைகளை பாதுகாக்கும் வகையில், இனிவரும் காலங்களில் அரசு பெண் ஊழியர்களின் மகப்பேறு விடுப்புக் காலத்தினை அவர்களது தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்துள்ளது.

முன்னாள் முதல்வர் கருணாநிதி வழியில் அரசு ஊழியர்களுக்கு அரணாக, அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாக திராவிட மாடல் அரசு என்றென்றும் தொடரும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

# மகளிர் உரிமைத்தொகை பெற ஜூன் மாதம் 4-ல் விண்ணப்பிக்கலாம்: அமைச்சர் தகவல்

சென்னை, ஏப்.29-

மகளிர் உரிமை தொகை கிடைக்காத தகுதியுடையோர், ஜூன், *4*ல் விண்ணப்பிக்கலாம் என அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்தார்.

இந்தியாவே திரும்பி பார்க்கும் அளவுக்கு மகளிர் உரிமை தொகை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த மகளிர் உரிமை தொகைக்கு மீண்டும் விண்ணப்பிக்கலாம் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். விடுபட்டவர்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கும் உரிமைத்தொகை வழங்கப்படும் எனவும் முதல் அமைச்சர் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து மகளிர் உரிமை தொகை கிடைக்காத தகுதியுடையோர், ஜூன், *4*ல் விண்ணப்பிக்கலாம் என அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்தார். இதுகுறித்து அமைச்சர் கீதா ஜீவன் கூறியதாவது: மகளிர் உரிமை தொகை பெற தகுதி இருந்தும், ஒரு சிலர் விடுபட்டிருக்கின்றனர். அப்படி உள்ளவர்களுக்கு முதல்வர் ஒரு வாய்ப்பு தருகிறார். ஜூன், *4*-ம் தேதி மனுக்கள் வாங்க சொல்லி இருக்கின்றார். முறையான ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்றார்.



சென்னை அரசு மருத்துவக்கல்லூரி (ம) ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை பிரிவு முன்னாள் இயக்குநர் பேராசிரியர் முத்துக்குமார் இயற்றிய செவி எலும்பு அறுவை சிகிச்சை பயிற்சி திறன் கையேட்டினை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் வெளியிட்டனர். இந்நிகழ்வில் முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், இயக்குநர்கள் அருண்தம்புராஜ், சங்குமணி, மருத்துவக்கல்லூரி முதல்வர் சாந்தாராம் உடனிருந்தனர்.